Registered as a Newspaper in Ceylon ★ விலை சதம் 10

# ஈழநாடு

மலர் 7 EELA NADU இதழ் 173

National Tamil Daily தேசிய தினசரி

(4-8-65)

விசுவாவசு ஆடி 20 ரபி: அகிர் பிறை 6 புதன்கிழமை

26 வது ஆண்டு விழாவை முன்னிட்டு

அரைச்சலார்

28-6-65 முதல்

கொழும்பு ஸ்ருடியோ
யாழ்ப்பாணம்

## கொலம்பியாவில் சீன சதி!

லண்டன், ஆக. 3

கொலம்பியாவில் சீன ஆதரவு கம்யூனிஸ்டுகள் நாடெங்கும் சதித்திட்டம் போட்டிருந்ததாகவும் இது கண்டு பிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து 20 பேர் கைது செய்யப்பட்டிருப்பதாயும் அறிவிக்கப்படுகிறது.

பொதுக் கட்டடங்களையும், அரசியல் தலைவர்களையும் தாக்க சதிகாரர்கள் திட்டமிட்டிருந்ததாய் கொலம்பியா இராணுவத் தலைவர் கூறினர்.

# காளிமுத்துவின் சகோதரர் கைது

# கூழாவடி பட்டப்பகல் கொலையின் எதிரொலி

## வேலைக்காரனைத்தேடி பொலிசார் வேட்டை

யாழ்ப்பாணம், வியாழன்

ஆனைக்கோட்டைப் பொலிஸ் பகுதியில் கூழாவடி என்னுமிடத்தில் பட்டப்பகலில் ஒரு வீட்டிற்குள் புகுந்து இரு பெண்களைத் தாக்கியதாகச் சந்தேகிக்கப்படும் காளிமுத்து என்பவரைத் தேடுவதில் பொலிஸார் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர், மூன்று தினங்களுக்கு முன் காளிமுத்து சென்று தங்கியிருந்ததாகக் கருதப்படும் காளிமுத்துவின் சகோதரர்வீட்டில் பொலிஸார் சோதனையிட்டதுடன் காளிமுத்துவின் சகோதரரையும் விசாரணைக்காகக் கைது செய்துள்ளனர்,

தாக்குதலுக்குள்ளான இரு பெண்களில ஒருவரான திருமதி ராஜமார்த்தாண்டன் காயமடைந்த சில மணிநேரத்தில் யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் காலமானர். திருமதி ராஜமார்த்தாண்டனின் தாயாரான திருமதி தேவராஜன் ஆஸ்பத்திரியில் இன்னமும் அறிவு மயங்கிய நிலையிலேயே இருப்பதாகவும் ஆனல் உடல் நிலை சிறிது குணமடைந்துவருவதாகவும் அறியப்படுகிறது.

சந்தேக நபரைத் தேடுவதிலும் இக்கொலை சம்பந்தமான புலன் விசாரணையிலும் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலைய குற்றப் பிரிவுப் பொறுப்பதிகாரி இன்ஸ்பெக்டர் சவுந்தரநாயகமும் ஈடுபட்டுள்ளார். திருமதி தேவராஜன் வீட்டில் காளிமுத்துவை வேலைக்கு அமர்த்த உதவி புரிந்ததாகக் கூறப்படும் இராஜரத்தினம் என்பவரையும் பொலிசார் நேற்று விசாரணை செய்ததாகத் தெரிகிறது. பெண்கள் இருவரும் தாக்கப்பட்ட வீட்டின் பகுதியை பொலிஸ் படப்பிடிப்பாளர் படம்பிடித்தார்.

திருமதி ராஜமார்த்தாண்டனின் மரணம்பற்றி நேற்று முன்தினமிரவு யாழ்ப்பாணம் மஜிஸ்டிரேட் விசாரணை நடத்தினர். பிரேத பரிசோதனையு நடைபெற்றது.

## 'போலியோ' நோய்க்கு நெடுந்தீவில் சிறுவன் பலி

### தொற்றுநோய் பகுதியாக பிரகடனப்படுத்த அதிகாரி உத்தரவு

யாழ்ப்பாணம், செவ்.

நெடுந்தீவிலுள்ள ஒரு பகுதியை தொற்று நோயுள்ள இடமாக பிரகடனப் படுத்தும்படியும், அதைத் தடுப்பதற்கு சகல நடவடிக்கையும், எடுக்கும்படியும் நெடுந்தீவுகாரியாதிகாரிக்கு யாழ்ப்பாணம் நகரப் பகுதி மரணவிசாரணை அதிகாரி திரு ஏ. அமிர்தலிங்கம் பொலிஸார் மூலம் அறிவித்துள்ளார்.

நெடுந்தீவைச் சேர்ந்த 10 வயது சிறுவனான எஸ். கிட்டிணன், இளம்பிள்ளை வாதத்தினல் மரணமானதைத் தொடர்ந்தே மேற்கண்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மரணவிசாரணையின் போது பின்னர் மனைவி வள்ளியம்மை சாட்சியமளிக்கையில், குழந்தை சாப்பிடக் கஷ்டப்பட்டதாகவும், கழுத்து திமிர முடியாமலிருந்ததாகவும் இதைத் தொடர்ந்து நெடுந்தீவு ஆஸ்பத்திரியில் அனுமதித்ததாகவும், அங்கிருந்து யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் அனுமதித்ததாகவும் கூறினர்.

டாக்டர் சுந்தரசிங்கம் சாட்சியமளித்தபோது, காலஞ்சென்ற சிறுவன் 1-ம் திகதி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டதாகவும், உடனடியாக சத்திர சிகிச்சையொன்று செய்யப்பட்டதாகவும், அதன் பின் சிறுவன் மரணமானன் எனறும் கூறினர். இயற்கை மரணமென மரணவிசாரணையதிகாரி தீர்ப்பளித்தார்.

## உள்ளூர் உற்பத்திபல்புகளுக்கு விலை நிர்ணயம்

கொழும்பு, செவ்வாய்

உள்ளூரில் உற்பத்தி செய்யப்படும் மின்சார பல்புகளின் மொத்த, சில்லறை விலைகளை விலைக்கட்டுப்பாட்டதிகாரி நிர்ணயம் செய்திருக்கிறர்.

இவற்றை விற்பனை செய்யும் வியாபாரிகள், பாவனையாளர்களின் பார்வையில் தெளிவாகத் தென்படும் இடத்தில் இந்த பல்புகளின் விலைப்பட்டியலைத் தொங்கவிட வேண்டும்.

மொத்தவிலை, சில்லறை விலை ஆகியன இதில் காட்டப்படுவதுடன். வாங்கும் பல்புகளுக்கு பற்றுச் சீட்டு கொடுக்கப்பட வேண்டும்.

நேற்றிரவுகொழும்பில் இது சம்பந்தமான அறிவிப்பு வெளியானது.

## வியட்காங் உத்தேசம்

செய்ரோ, ஆக. 3

தென்வியட்னும் நகரங்களுக்கான எல்லா சப்ளை பாதைகளையும் துண்டிப்பதே தங்கள் உத்தேசம் என வியட்காங் அதிகாரி ஒருவர் கெய்ரோவில் கூறினர்.

## இந்தியாவுக்கு 6 நீர்மூழ்கேள்

புதுடில்லி, ஆக. 3

இந்தியா ரஷ்யாவிலிருந்து 6 நீர்மூழ்கிகளை வாங்க விரும்புவதாக பாதுகாப்பு மந்திரி திரு சாவன் கூறினர். சோவியத் யூனியனுக்கு இதுசம்பந்தமான ஒரு தூது கோஷ்டி அனுப்பப்படவிருப்பதாய் அவர் தெரிவித்தார்.

## இரண்டு வார்டுகள் மூடப்பட்டன

### நிதி நெருக்கடி காரணம்?

காங்கேசன்துறை, செவ்

காங்கேசன்துறை அரசினர் ஆஸ்பத்திரியில் இருந்த 2 காசநோயாளர் வார்டுகள் மூடப்பட்டுவிட்டன. இவற்றில் தங்கியிருந்து சிகிச்சைபெற்ற நோயாளிகள் மயிலிட்டி ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்பட்டுள்ளனர். இதில் கடமையாற்றிய உத்தியோகத்தர்களும், ஊழியர்களும் இடமாற்றம்செய்யப்பட்டுள்ளனர். ஆனல் வார்டுகள் மூடப்பட்டதற்கான காரணம் என்னவென்பதை அதிகாரிகளிடமிருந்து தெரிந்துகொள்ளமுடியவில்லை.

நிதிநெருக்கடி காரணமாகவே இந்த வார்டுகள் மூடப்பட்டதாகச் சொல்லப்படுகின்றது. சென்ற வருடத்தில் சுமார் 1000க்கு மேற்பட்ட காசநோயாளர் காங்கேசன்துறை ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றனர். இந்தவருடம் 1000 நோயாளிகளுக்கு மேலானேர் சிகிச்சைபெற்று வருகின்றனர். நோயாளிகள் குறைந்ததின் காரணமாகவே வார்டுகள் மூடப்படவில்லையென்பது தெளிவாகிறதென்றும் நிதிநிலைமை காரணமாகவே இது மூடப்பட்டிருக்க வேண்டுமென்றும் அபிப்பிராய மேற்பட்டிருக்கின்றது.

அரசினர் ஆஸ்பத்திரியில் கண்பரிசோதனையும் நடத்தப்படவேண்டுமென திரு எஸ். ஜே. வி. செல்வநாயகம் எம். பி. விடுத்த கோரிக்கையைத் தொடர்ந்து இப்பொழுது வாரத்தில் செவ்வாய்க்கிழமையில் கண் சிகிச்சையும் நடைபெறுகின்றது.

சட்டவிரோத குடியேற்றத்தடுப்பு என

## "மக்களை வதைத்து துன்புறுத்தாதீர்?"

### கரைச்சி கிராமசபை கோரிக்கை

கிளிநொச்சி, செவ்

இலங்கையில் 1946-ம் ஆண்டுக்கு முன்பிருந்து வசித்து வரும் மக்களைச் சட்டவிரோத குடியேற்றக்காரர்களென பொலிஸ் இலாகா அதிகாரிகள் கைதுசெய்து, அடித்து துன்புறுத்தி, வேறு இடங்களுக்குக் கொண்டுசெல்வதைக் கண்டித்து, கரைச்சி கிராம சபையில் ஏகமனதாக ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

திரு, வி. ஆனந்தசங்கரி தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில், இத் தீர்மானத்தை ஆதரித்துப் பல அங்கத்தவர்கள் பேசினர்கள்.

அத்தீர்மானத்தில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது: சட்டவிரோதகாரர்கள் என்று கைது செய்யப்படுபவர்கள், அவரவர் வசிக்கும் எல்லைகளை விட்டு அப்புறப்படுத்துமுன்னர் அவர்களை அப்பகுதிக் காரியாதிகாரியிடம் ஒப்படைத்து அவரது பூர்வாங்க பரிசிலனைக்குப் பின்னரே வெளி முகாம்களுக்குக் கொண்டுசெல்ல ஏற்ற ஒழுங்குகளைச் செய்யவேண்டும்.

இத்தீர்மானத்தை நடைமுறைக்குக் கொண்டுவருமபடி சம்பந்தப்பட்ட அதிகாரிகளையும், அரசாங்கஅதிபர், பொலிஸ் இலாகா அதிபர் பாராளுமன்ற உறுப்பினர் ஆகியோரையும் கேட்டுக்கொள்வதாகவும் முடிவு செய்யப்பட்டது.

இச்சபையில் கீழ்க்காணும் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

கரைச்சிக் கிராமசபைப் பகுதியில் விளையாட்டுக்கிளப்புகள் என்ற நாமத்துடன் இயங்கி வரும் சூது, மதுபான வியாபாரம் இன்னும் அனேக தவறான நடத்தைகளுக்கு வழிவகுக்கும் கிளப்புகளுக்குரிய உத்தரவு பத்திரங்களை ரத்து செய்து இப்பகுதியின் முன்னேற்றம் கருதி அக்கிளப்புகளைமூட நடவடிக்கை எடுக்கும்படி சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கேட்டுக்கொள்வது.

## டிச. 3-ல் பறக்கும் தட்டு பூமிக்கு வரும்

புவனஸ் அயர்ஸ், ஆகஸ்ட். 3

வருகிற டிசம்பர் 3-ம் திகதி மனிதசமூகத்துடன் தமது மக்கள் பூரண தொடர்புகொள்வார்கள் என 39 அங்குல உயரமான பறக்கும் தட்டு விமானி கூறியதாய் பெலின்மார்ட்டினஸ் என்ற வர்த்தகர் கூறினர் இந்த விஷயம் "அட்லாண்டிடா" பத்திரிகையில் வெளியாகியிருக்கிறது.

கடந்த 5 வாரங்களில் பறக்கும்தட்டுபற்றி கடைசியாகக் கிடைத்த தகவல் இது. பறக்கும்தட்டு விமானியுடன் தான் கடந்த ஏப்ரல் மாதமும், ஜூன் மாதமும் இருதடவை சம்பாஷித்ததாகவும், விமானி ஸ்பானிய மொழியில் பேசியதாயும் மார்ட்டினஸ் மேலும் கூறினர். டிசம்பர் 3-ம் திகதி தாங்கள் பூமியில் இறங்கப் போவதாயும் அவர் கூறினராம்.

வடபகுதி கரையோரங்களில்

## தடுப்புக் காவல நிலையங்கள் அதிகரிக்கப்படும்

### உயர்தர அதிகாரிகள் மகாநாட்டில் முடிவு

குரும்பசிட்டி, செவ்

இலங்கை இராணுவப் படைத் தளபதி கேர்ணல் ஏ. ஆர். உடுகம இன்று காலை பலாலி இராணுவ முகாமிற்கு விஜயம் செய்து வடபகுதி கரையோரங்களில் அதிகரித்து வரும் கள்ளக்குடியேற்றக்காரரின் வருகை, கள்ளக் கடத்தல் போன்றவற்றை தடைசெய்ய நடவடிக்கைகள் எடுப்பது குறித்து இராணுவ வீரர்களுடன் பேச்சுவார்த்தை நடாத்தினர். பலாலி இராணுவ முகாம் பிரதம பொறுப்பு அதிகாரி திரு. மொரிஸ் ஜெயவீரவின் தலைமையில் நடைபெற்ற மகாநாடு ஒன்றில் பல்வேறு வகையான யோசனைகள் தெரிவிக்கப்பட்டு ஆராயப்பட்டன. கரையோரங்களில் மேலும் தடுப்புக்காவல் நிலையங்கள் நிறுவவென்று முடிவு செய்யப்பட்டது. மேலும் இராணுவ வீரர்களை இங்கு

(6-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மணிவாக்கு**

மனத்திலே தீய எண்ணங்கள் நிறைந்து கிளம்புகின்றன. ஆண்டவனின் திருநாமத்தை சதா உச்சரிப்பதால் இத்தீமை நீங்கி மனம் சுத்தமாகலாம். இதனால் தேகத்திலே தெய்வீகப் பொலிவு மேற்படும்.

—சுவாமி ராமதாஸ்

ஈழநாடு

EELANADU National Tamil Daily. Post Box 49. Jaffna.
Grams: "EELANADU" Jaffana
Phone: 389

யாழ்ப்பாணம் விசுவாவசு ஆண்டு ஆடி மீ 20 ௳ (4-8-65)

## வேலையின்மையும் வெள்ளை அறிக்கையும்

வேலையில்லாத் தொகை ஒரு லட்சத்து எழுபத்தேழாயிரத்து எண்ணூற்றி எழுபத்தொன்றாக உயர்ந்திருப்பதாக தொழில் இலாகாவின் மதிப்பீடு தெரிவிக்கிறது. இத்தொகை இன்னும் அதிகரிக்கக்கூடும்.

வேலையில்லாத் திண்டாட்டப் பிரச்னை இங்கு மட்டுமல்ல உலக நாடுகள் பலவற்றிலும் உள்ளது. குபேரநாடு என வர்ணிக்கப்படும் அமெரிக்காவிலும் பொதுவுடைமை நாடுகளிலும்கூட இப்பிரச்னை இருக்கத்தான் செய்கிறது. இலங்கையில் எந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தபோதிலும் உடனடியாக இப்பிரச்னைக்குத் தீர்வு கிடைத்துவிடும் என்று எதிர்பார்க்க முடியாது. சோஷலிஸ நாடுகளில் பெரும் தொழிற்சாலைகளும் கனரகத் தொழிற்சாலைகளும் அரசாங்க உடைமையாக்கப்பட்டு அங்கு அரசாங்கத்துக்குப் போதிய வருமானம் கிடைத்து வருகிறதென்பது உண்மைதான். அமெரிக்காவிலும் மற்றும் ஆஸ்திரேலியா முதலிய நாடுகளிலும் பெரும் பெரும் தொழிற்சாலைகள் மட்டுமல்ல விஞ்ஞான வளர்ச்சியால் விவசாயம், கைத்தொழில்கள்கூட இயந்திரமயமாக்கப்பட்டு அங்கு உற்பத்தித்திறன் அதிகரித்துள்ளதென்பதும் உண்மையே. ஆயினும் சகல தொழில்களும் இயந்திரமயமாக்கப்பட்ட காரணத்தால் அந்நாடுகளில் மனித உழைப்புச் சக்திக்கு அவசியமேற்படாது போய்விடுகிறது. இதனால் அந்நாடுகளில் செல்வம் அதிகரிப்பினும் வேலையில்லாத் திண்டாட்டமும் அதிகரித்தே வருகிறது.

இதையறிந்துதான் காந்திஜி இந்தியாவில் கிராமக் கைத்தொழில்களையும் குடிசைக் கைத்தொழில்களையும் ஆதரிக்க வேண்டுமென்றும் குடிசைக் கைத்தொழில்களில் இயந்திரத்தைப் புகுத்துவதனால்கூட அது தனிமனிதர் அல்லது ஒரு குடும்பம் உபயோகிக்கக் கூடியதாக இருக்க வேண்டுமென்றும் வலியுறுத்தி வந்தார். காலஞ்சென்ற இந்தியப்பிரதமர் நேரு இந்தியாவில் கனரகத் தொழிற்சாலைகளை ஆரம்பித்த போதிலும் குடிசைக் கைத்தொழில் விருத்தியிலும் அக்கறை செலுத்தினார்.

இலங்கையிலும் கைத்தொழில், கனரகத் தொழில்களுக்குத் திட்டமிடப்படுவது பற்றியும் பெரும் இயந்திர சாதனங்களை இறக்குமதி செய்வதுபற்றியும் பேசப்படுகிறது. விவசாயத் துறையிலும்கூட கூட்டுப் பண்ணைகள் அமைத்து இயந்திர மயமாக்க வேண்டுமென்றும் யோசனை கூறப்படுகிறது. உற்பத்தியைப் பெருக்கவும் செல்வத்தை அதிகரிக்கவும் இயந்திரமயமான பெரும் தொழில்களை ஆரம்பிக்கவேண்டியது அவசியம்தான். ஆனாலும் வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்கவும் மனித உழைப்புச் சக்தியைப் பயன்படுத்தவும் சிறு சிறு தொழில்களும் குடிசைக் கைத்தொழில்களும் விவசாயமும் பெரும் தொழில்களுடன் சேர்ந்து விருத்தியடைந்துவரவேண்டும்.

வேலையில்லாப் பிரச்னைக்கு அரசாங்கம் மட்டுமே தீர்வு காணவேண்டுமென எதிர்பார்ப்பதும் நல்லதல்ல. இப்பிரச்னை நாட்டுமக்கள் தங்கள் தனிப்பட்ட பிரச்னையெனவும் கருதவேண்டும். தனியார் ஸ்தாபனங்களும் இவ்விஷயத்தில் பெருமளவு உதவிபுரியலாம்.

கல்வி வெள்ளை அறிக்கை விரைவில் பார்லிமெண்டில் சமர்ப்பிக்கப்பட விருப்பதாகவும், படித்த வேலையற்றவர்களுக்கு வேலைகிடைப்பதற்கு வகைசெய்வதும் பயிற்சி பெற்றவர்கள் தொழில்துறைக்கும் கிடைக்க வகைசெய்வதும் இந்த அறிக்கையின் முக்கிய நோக்கம் எனக்கூறப்படுகிறது. கல்விக்கூடங்களில் தொழிற் பயிற்சி அளிப்பதென்பது சிறிய விஷயமல்ல. சோவியத் யூனியனில் மாணவர்கள் தொழிற்சாலைகளுக்கு அனுப்பிப் பயிற்சியளிக்கப்படுகிறார்கள். இங்கு அதற்கு வாய்ப்பும் வசதியும் இல்லை. பள்ளிக்கூடங்களைத் தொழிற்சாலைகளாக மாற்றுவதும் சிறிய விஷயமல்ல. அரசாங்கம் மட்டுமல்ல கல்விமான்கள் நிபுணர்கள் நன்கு ஆராய்ந்து திட்டமிட வேண்டியது இது.

# செந்தமிழ்வளர்த்த சுந்தர அடிகள்

— பண்டிதர் மு. இரத்தினேஸ்வர ஐயர் —

செந்தமிழ்நாடு, சமயமும் தமிழுங்கலந்து செழிப்புற்றது. மூவேந்தரும் புலவர் பெருமக்களும் இருகண்களாகச் சமயத்தையும் தமிழையும் பாதுகாத்து வந்தனர். சிவபெருமான் அடியார்களின் வாயிலானே தமிழ்ப்பாமாலைகளை அணிந்து கொண்டார். தேவார திருவாசகங்கள் சிவபோத முனைப் பின்றிச் சிவகரணம்பற்றிநின்ற நிலையில் அருளிச்செய்யப்பெற்றவை.

அவதாரம்: சிவபெருமான் எழுந்தருளிய கைலாசம் புனிதமானது. அங்கே ஒருகாலம் சிவபெருமான் ஒரு சித்திரத்தைத் தீட்டி; அம்மையாரை அழைக்கச்செய்தார். அச்சித்திரத்தினின்று சுந்தர உருவம் தோன்றிற்று சுந்தரர் நாமம் பொலிந்தது. பின்பு, பிரம விட்டுணுக்களின் உயிர்பருக எழுந்த நஞ்சைக் கையிலெடுக்கிய சுந்தரர்க்கு ஆலாலசுந்தரர் என்ற பேரும் புகுந்தது. என்னவானாலும், யாரானாலுஞ்சரி, ஆசை அல்லற்படுத்தும். சுந்தரர் நந்தவனஞ்சென்று பூப்பறித்தார். அம்மையாருக்கு அநிந்திதை கமலினி ஆகிய இருவரும் பூக்கொய்தனர். ஆணும் பெண்ணும் கூடினால் வரும்மோசம். கடவுளோ சர்வஜ்ஞர். இருபகுதியார் உள்ளகதை அறிந்து பிறக்க ஆக்ஞை செய்தார் எம்பெருமான். சுந்தரர் திருநாவலூரில் ஆயோகிதராக அவதரித்தார்.

அவாவென்ப தெவ்வுயிர்க்கும் தவாப்பிறப்பீனும் வித்து.

(இது பொய்யாமொழி)

சுந்தரர்க்கு நம்பியாரூரர் என்பது திருநாமம். நரசிங்க முனையர் ராஜபோகத்தை நல்க, சடையனார் வைதிகத் திருவை அளிக்க நம்பியாரூரர் வளர்ந்தார். அவர் மணப்பருவம் வந்ததுகண்டு (திருமணப்) பெரியோர் மணம் பேசினர். சடங்கவிசிவாசாரியர் மகனை மணமகள் ஆனாள். பிரமசரியம் சரியச் சிவனருள் புறப்பட்டுவிட்டது. என்ன சங்கதி மாப்பிள்ளை மணப்பந்தர் சாரக் கிழப்பிராமணரும் வந்தார். ஐயர் நம்பியாரூரர் எனது அடிமைஎன்றார். வாக்குவாதம் பெலத்தது. அடிமை ஓலையை ஐயர்காட்ட நம்பியாரூரன்பறித்துக்கிழித்துவிட்டார். இதுதான் நம்பியாரூரரை அடிமை என்று சாதித்துவிட்டது. ஆனாலும் திருவெண்ணெய் நல்லூரில் பிரம்மணப்பெரியார்சபையாகிய கோட்டில் பதிவாயிற்று. விசாரணையில் அடிமை என்று தீர்ப்பாயிற்று. நம்பியாரூரரும் ஐயாவைப்பற்றி அறிந்தார். திருவெண்ணெய் நல்லூரில் திருவருட்டுறை ஆலயத்திலே ஐயர் சென்று மறைந்துவிட்டார். வலிய சொல்லுக்களை நம்பியாரூரர் வழங்கியதால் வன்றொண்டரானார். பின்பு பித்தன்என்றுகூறியதை முதலாகப்பாட இறைவன் அருளிச் செய்தார். "பித்தா பிறைசூடிபெருமானே யருளாளா எத்தான் மறவாதே நினைக்கின்றேன் மனத்துன்னை வைத்தாய் பெண்ணை தென்பால் வெண்ணை நல்லூர் அருட்டுறையுள் அத்தா உனக்காளாயினி யல்லேனனலாமே"

இன்பக் கடலுள் மூழ்கிச் சிவசிந்தனையுடன் நம்பியாரூரர் திருநாவலூர் சென்றார். அவ்விடத்திலும் சுவாமி தரிசனஞ்செய்து சிதம்பரம் போய் நடராஜப் பெருமானைப் போற்றி செய்தார். அத்தருணம் நம்பியாரூரர் துரியாதீதக்கனிபெருநிலை அடைந்தமை பின்வரும் பாடல் காட்டும்.

> ஐந்துபேரறிவுங் கண்களே கொள்ள
> அளப்பருங் கரணங்கள் நான்கும்
> சிந்தையேயாகக் குணமொரு மூன்றுந்
> திருந்துசாத்துவிகமேயாக
> இந்துவாழ் சடையானாடுமெல்லையில்
> தனிப்பெருங் கூத்தின்
> வந்தபேரின்ப வெள்ளத்துட் டிளைத்து
> மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்தார்.

### அருள் வழிச்சேறல்

அத்தருணத்தில் நம்பியாரூரரைத் திருவாரூருக்கு வரும்படி ஒரு வானொலி கேட்டது. அவ்விடம் நடராஜப்பெருமானை வணங்கிக்கொண்டு சீர்காழி முதலிய சிவாலயங்களையும் வணங்கித் திருப்புன்கூர் பணிந்து திருவாரூர் சேர்ந்தார். அடியார் கூட்டம் வன்றொண்டரைப் பலவரிசைகளுடன் வரவேற்றனர்.

> கரையுங் கடலும் காலையு மாலையும்
> உரையில் விரவி வருவா ளொருவனுருத்திரயோகன்
> வரையின் மடமகள் கேள்வன் வானவர் தானவர்க்கெல்லாம்
> அரையணிப்பது மாரூரவரெம்மையு மாள்வரோ கேளீர்,

இப்படியே பாடி வீதிவலம் வந்து வன்மீகநாதப் பெருமானையும், வீதி விடங்கப்பெருமானையும் துதித்து வந்தார். வன்மீகநாதப் பெருமான் தம்மைத் தோழராகத் தந்தோம் என்று அருளிச்செய்தார். அன்று முதல் நம்பியாரூரர் தம்பிரான் தோழரானார். தேவாசிரியன் பணிந்து அங்கே இருக்கும்போது, பரவையார் என்ற [illegible] முதலிய மேன்மைகளுக்கும் முனைவில்லா கூட்டத் திருக்கூட்டம் கண்டது. அடியார்க்கு அடியேனாகும் நாளும் உளதே என்ற வேட்கை நம்பியாரூரரிடம் தோன்றியது. 'தில்லைவாழ் அந்தணர் தம்மடியார்க்குமடியேன்' என்று அடியெடுத்துக் கொடுக்க திருத்தொண்டத் தொகையை நம்பியாரூரர் பாடியருளினார். அதுதான் பேரடியார் திறத்தை சைவசமயிகள் அறிந்து மற்றதைப் பெறச் சாதகமாக நிலவிற்று. சேக்கிழார் சுவாமிகள் பெரிய புராணம் காண்க.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் பலதலங்களைத் தரிசித்துக்கொண்டு பரவையார் உருத்திரபாத சேவைக்குப் பணம் வேண்டுமென்றார். திருப்புகலூரில் சுவாமி வழிபாடு செய்து செங்கற்கள் பொன்னாகப் பெற்றார். பின்பு ஒருமுறை பன்னீராயிரம் விருத்த கிரசுரர் கிருபையால் பெற்று ஆற்றிலிட்டு அதனை திருவாரூரிலுள்ள குளத்தில் எடுத்தார்.

### சங்கிலி மணம்

பல சிவாலயங்களையும் தரிசனைசெய்து திருவொற்றியூர் அடைந்தார் வன்றொண்டர். அங்கே கமலினி சங்கிலியார் என்ற பேருடன் அவதரித்திருந்தார். அவரைத் திருவருட்படி மணஞ்செய்திருந்தார். சேரமான் பெருமானாயனார் நட்பும் சுந்தரருக்குக் கிடைத்தது. அவர் கொடுத்தபொருளுடன் சுந்தரர் வரும்போது திருமுருகன் பூண்டியில் எம்பெருமான் பூதங்களைக் கள்வராக ஏவிப் பறிக்கச்செய்தார். சுந்தரமூர்த்தி நாயனார் சிவபெருமானைப் பாடி அப்பொருள்களைப் பெற்றுக் கொண்டார்.

பரவையார் வீட்டில் வாழும் காலெல்லாம் ஞாயிறு கிழவர் என்பவர் சுந்தர அடிகளுக்கு வேண்டுவ கொடுத்து வந்தார். நெல்லெடுக்கக் கூலியாள் வேண்டும் என்றும் பாடினார்.

> "கோளிலியெம் பெருமான்
> குண்டையூர்ச்சில நெல்லும் பெற்றேன்
> ஆளிலையெம் பெருமானவை
> யட்டித்தரப்பணியே

என்பது.

### பேரதிசயச் செயல்

பின்பு மலைநாட்டிலுள்ள தலம் பல வணங்கி ஆரூரர் செல்லும்போது அவிநாசி என்ற தலம்வந்தது. அங்கே முதலைவாயினின்று அது விழுங்கிய பிராமணச் சிறுவனை அதன் வாயிலிருந்து உமிழும்படி பாடி அழைத்துக் கொடுத்த அதிசயப்புதச் செயல் சைவ சமய உண்மையை வெள்ளிடை வெற்பாக விளக்குவதாம். "பிள்ளைதரச் சொல்லு காலனையே" என்னும் அகங்காரத்தால் முடியாது என்பதை நோக்குக. இப்படியே செந்தமிழ் மாலைகளைக் கட்டுக்கட்டாகக் கயிலாசவாசச் சிவபிரான்மீது பாடித் தமது நண்பர் சேரமான் பெருமானுடன் இருக்கும்போது கயிலையின் பழைய நினைவு வந்தது. மகோதையிலுள்ள திருஅஞ்சைக்களம் ஆலயம் வணங்கி வரும்போது பிரம விஷ்ணுவாதிதேவர்கள் வெள்ளையுடன் வந்து அழைத்துச் சென்றனர். சேர அரசகுமகுதிரையின் செவியில் பஞ்சாட்சர உபதேசஞ்செய்து கயிலைசார்ந்தார். அவர் திருக்கயிலாய ஞானவுலாப் பாடிச் சென்று சிவபிரானைக் கேட்கச் செய்தார். இவை ஒரு ஆடிமாசச் சுவாதி நட்சத்திரதன்று நிகழ்ந்தன. இன்றும் அப்பெருநாளை நாம் கொண்டாடுவது முக்கியமாகும். சைவசமயமே சமயம்.

> தானெனை முன்படைத்தான்
> அதறிந்து தன் பொன்னடிக்கே
> நானெனை பாடலந்தோ நாயி
> னேனைப் பொருட்படுத்தி
> வானெனை வந்தெதிர் கொள்ள
> மத்தயானையருள் புரிந்து
> ஊனுடல் வேறுசெய்தான்
> நொடித்தான் மலையுத்தமனே
> திருச்சிற்றம்பலம்

## ஐயாறன் துறை

சுதந்திரத்துக்குப் பின் பிரதமர் டட்லி எப்படி இருக்கிறார் என்பதைக்காண, சென்றவாரம் பார்லிமெண்ட் சபைக்குச் சென்றேன். புதிய சபைக் கட்டடத்தையும் அப்போதுதான் முதன்முதல் கண்டேன்.

பிற்பகல் 2 மணி முதல் இரவு 7-30 மணிவரை கூட்டம். இடையே 4 முதல் 4-30 மணிவரை தேத்தண்ணீர் அருந்த சபைக்கூட்டம் ஒத்திவைக்கப்பட்டிருந்தது. இந்த ஐந்து மணி நேரத்திலே நாலரை மணி நேரத்துக்குமேல், பிரதமர் டட்லி தமது ஆசனத்திலேயே இருந்து விவாதங்களைக் கூர்ந்து கவனித்து குறிப்பெடுத்துக்கொண்டிருந்ததைக் கண்டேன். எதிர்க்கட்சித் தலைவரான ஸ்ரீமா அன்று கூட்டத்துக்கு வரவில்லை. வேறு எந்த மெம்பரும் தொடர்ந்து பிரதமரைப்போல் அவ்வளவு நேரம் சபையில் இருக்கவில்லை.

* * *

சபாநாயகருக்கு வலப்புறம் மந்திரிகள் அமர்ந்துள்ள முதல் வரிசையிலே கீழ்க்கோடியில் தமிழரசுக்கட்சித் தலைவர் எஸ். ஜே. வி. யும், மேல்கோடியில் தமிழ்க்காங்கிரஸ் தலைவர் ஜி. ஜி யும் அமர்ந்திருந்தனர். கட்சித்தலைவர்கள் என்றமுறையில் முதல்வரிசையிலே அவர்களுக்கு இடமளிக்கப்பட்டிருப்பினும், இருவரும் ஆகவெகு தூரத்தில் இருந்தார்கள். இதைப்பற்றி ஓர் அன்பரிடம் கூறியபோது "கிழக்குகிழக்குத்தான் மேற்கு மேற்குத்தான் இரண்டும் என்றும் சந்திக்காது" என்று ஆங்கிலக் கவி கீட்ஸ் என்பவர் கூறியுள்ளதை எடுத்துக்கூறிச் சிரித்தார். கீட்ஸ் கூறியதை பலர் மறுத்துள்ளனர். இக்காலத்தில் கிழக்கும் மேற்கும் பலவிதங்களிலும் சந்திக்கின்றன. அதுபோல இவ்விரு தமிழ்த்தலைவர்களும் நேரில் கூடிப்பேசி ஒத்துழைக்கும் நல்ல காலம் நெருங்கிவருகிறதென்று நம்புவது மிகையாமா?

* * *

அன்று பேச்சுக்கள் அநேகமாக ஆங்கிலத்தில்தான் சிங்களத்தில் இருவரும் தமிழிலே கிளிநொச்சி பிரதிநிதி பண்டிதர் கா. பொ. இரத்தினமும் பேசினர். யாழ்ப்பாண ஆஸ்பத்திரியின் குறைகளைப்பற்றியும்; நோயாளரின் அவதிபற்றியும் "ஈழநாடு" பத்திரிகையில் வெளியான செய்தியையும், தலையங்கத்தின் ஒரு பகுதியையும் கிளிநொச்சிப் பிரதிநிதி சபையில் எடுத்துச்சொன்னதுடன், அப்பகுதியிலே நீண்டகாலமாக குடும்பங்களுடன் வசித்துவரும் கமக்காரர்களை பொலிசார் திடீர் திடீரெனக் கைதுசெய்து கள்ளக்குடியேற்றக்காரர் என்று சொல்லி சிறைப்படுத்தும் கொடுமையையும் நிறுத்த வேண்டுமென்று ஆணித்தரமாக வாதித்தார்.

பிரதமர் இதற்குப் பதிலளிப்பாரென்று ஆவலுடன் எதிர்பார்த்தேன், ஆனால் அச்சமயம் ஏதோ அவசரகாரியமாக சபைக்கு வெளியில் சென்றிருந்தபடியோ என்னவோ இதைப் பற்றிக் குறிப்பிடாதது ஏமாற்றமளித்தது.

* * *

அன்றைய விவாதத்துக்கு பிரதமர் டட்லி சுமார் முக்கால் மணிநேரம் அளித்த பதில் அவரே கடைசியாகக் கூறியதுபோல், "அவர் செத்துக்கொண்டிருக்கவில்லை" என்பது மட்டுமல்ல, மிக உற்சாகத்துடன் இருப்பதையும் வாதத்திறமையில் யாருக்கும் பின்வாங்கவில்லை என்பதையும் காட்டுவதாக இருந்தது.

கள்ளக் குடியேற்றக்காரர்களைச் சுடவேண்டுமென்று அவரது உறவினரான தம்பெதெனியா மெம்பர் ஆர். ஜி. சேனநாயக்கா பழைய பல்லவி பாடியபோது "இதன்னிலைமையில் இப்படிக் கூறும் ஓர் ஆசாமி இருப்பதைக் கண்டு நான் வெட்கப்படுகிறேன்"

(6-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ஆண்டு ஒன்றுக்கு 8500 காமன்வெல்த் மக்களே குடியேறலாம்

## பிரிட்டிஷ் அரசாங்கத்தின் புதிய குடியேற்றக் கொள்கை வெளியீடு

### மால்டாவுக்கு தனிச்சலுகை

லண்டன், ஆக. 3

**தற்போது ஆண்டு ஒன்றுக்கு 21000 காமன்வெல்த் மக்களை அனுமதித்த பிரிட்டன், இனி ஆண்டு தோறும் 8500 பேரை மட்டுமே அனுமதிக்கும். மால்ட்டாவிலிருந்து ஆண்டொன்றுக்கு 1000 பேர் பிரிட்டனில் அனுமதிக்கப்படுவர்.**

பிரிட்டிஷ் அரசாங்கத்தின் புதிய குடியேற்றக் கொள்கை பற்றி நேற்று வெளியிடப்பட்ட வெள்ளை அறிக்கையில் இந்த விபரம் தரப்பட்டிருக்கிறது.

ஏற்கனவே பிரிட்டனில் 10 லட்சத்துக்கதிகமான காமன் வெல்த் மக்கள் குடியேறியிருக்கின்றனர். இவர்களில் பெரும்பாலானோர் இந்தியா, பாகிஸ் மேற்கிந்தியத்தீவுகள் ஆகிய நாடுகளிலிருந்துவந்தவர்கள்.

ஏற்கனவே குடியேறியிருக்கும் மக்களுக்கு நல்ல வீட்டு வசதி, அவர்களின் குழந்தைகளுக்கான கல்வி வசதி, வேலைவாய்ப்பு ஆகியன அளிக்க அரசாங்கம் தீவிரமாக உதவுமென வெள்ளை அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது. அவர்கள் பிரிட்டனில் ஸ்திரமாக வாழ்வதற்கான ஏற்பாடுகளை அரசாங்கம் மேற்கொள்ளும்.

வேலைவாய்ப்பு விஷயத்தில் முன்பு ஓரளவு பாரபட்சம் இருந்துவந்திருக்கிறது என வெள்ளை அறிக்கை குறிப்பிடுகிறது.

பயிற்சி பெறாத தொழிலாளர்கள் குடியேற்றத்திற்கு அனுமதிக்கப்படமாட்டார்கள்.

குடியேற்ற விஷயத்தில் இனப் பாரபட்சம் கடைப்பிடிக்கப்படமாட்டாதென்றும், சகல காமன்வெல்த் மக்களும் சமமாக நடத்தப்படுவார்கள் என்றும் பிரிட்டிஷ் அரசாங்க அதிகாரி ஒருவர் கூறினார்.

அதேசமயம் ஆஸ்திரேலிய வெள்ளையர் குடியேற்றக்கொள்கை நீக்கப்படவேண்டுமென்றும், நிறமக்கள் குடியேற அனுமதிக்கப்படவேண்டும் என்றும் எதிர்க்கட்சியைச் சேர்ந்த தொழிலாளர் சம்மேளனம் அரசாங்கத்தைக் கேட்டிருக்கிறது. கடந்த 67 ஆண்டுகளாக ஆஸ்திரேலியாவில் குடியேற்றத் தடை அமுலாகிவருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

## இந்தூரில் ராணுவம் உஷார்

இந்தூர் ஆக 3

இந்தூரில் நேற்று ஏற்பட்ட ஆர்ப்பாட்டத்தைத் தொடர்ந்து ராணுவம் உஷார்ப்படுத்தப்பட்டிருக்கிறது.

நேற்று ஜனசங்கக் கட்சியைச் சேர்ந்த 1000 பேர் இந்தோ-பாகிஸ்தான் கட்ச் ஒப்பந்தத்தை எதிர்த்து பலாத்கார ஆர்ப்பாட்டம் நடத்தினர். பல பொலிஸ் அதிகாரிகள் உட்பட 60 பேர் காயமடைந்தனர். 20 பேர் கைதுசெய்யப்பட்டனர்.

மாணவர்கள் விடுத்த பகிஷ்கார ஆர்ப்பாட்டத்தைத்தொடர்ந்து மத்தியபிரதேசத்தில் சகல கல்வி நிலையங்களும் மூடப்பட்டன.

## "மகாநகர்" பனுமா செல்லும்

புதுடில்லி, ஆக. 3

பனுமாவில் நடைபெறவிருக்கும் சர்வதேச திரைப்பட விழாவுக்கு அனுப்ப "மகாநகர்" என்ற திரைப்படம் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது.

## கப்பல் மூழ்கியது 22 பேர் பலி

டோக்கியோ, ஆக. 3

பசிபிக்கில் ஒரு அமெரிக்கக் கப்பலும், ஜப்பானிய கப்பல் ஒன்றும் மோதிக்கொண்டதால் ஜப்பானியக் கப்பல் மூழ்கியது. அதிலிருந்த 22 மாலுமிகளைக் காணவில்லை.

## சென்னையில் 86 பேர் கைது

சென்னை, ஆக 3

இடதுசாரி கம்யூனிஸ்டுகளை விடுதலைசெய்யவேண்டும் எனக் கோரி ஆர்ப்பாட்டம் செய்த 86 பேர் இன்று சென்னையில் கைதுசெய்யப்பட்டனர்.

## பூட்டானில் 12 பேர் கைது

புதுடில்லி, ஆக. 3

பூட்டான் மன்னரை கொலை செய்ய முயன்றது சம்பந்தமாக 12 பேர் கைதுசெய்யப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டது.

## பூட்டானில் 17 பேர் கைது

புதுடில்லி, ஆக. 3

பூட்டான் மன்னர் ஜிக்மி டோர்ஜியைக் கொலை செய்ய நடைபெற்ற முயற்சியைத் தொடர்ந்து இதுவரை 17 பேர் கைது செய்யப்பட்டதாய் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

## 101 கோடி கடன் திரட்ட முடிவு

புதுடில்லி, ஆக 3

இந்தியாவின் 14 ராஜ்யங்கள் 101 கோடி ரூபாய் கடன் திரட்ட முடிவுசெய்திருக்கின்றன.

## சுவாமி சிவானந்த சரஸ்வதி 2-வது புண்ணிய திதி ஆராதனை

### ரிஷிகேசத்தில் சிறப்பாக நடந்தது

ரிஷிகேசம், ஆக. 3

தெய்வநெறிக் கழகங்களின் தலைமை ஸ்தாபனமாக விளங்கும் ரிஷிகேசத்திலுள்ள சிவானந்த ஆசிரமத்தில சுவாமி ஸ்ரீ சிவானந்த சரஸ்வதி மகராஜின் 2வது புண்ணிய திதி ஆராதனை சுவாமி ஸ்ரீ சிதானந்த சரஸ்வதி தலைமையில் சிறந்தமுறையில் நடைபெற்றது காலை 4 மணிமுதல் இரவு 1-30 மணிவரை நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடைபெற்றன. காலையில் பிரார்த்தனை, தியானம் ஆகியவற்றுடன் நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின.

சுவாமி ஸ்ரீ சிதானந்த சரஸ்வதி சுவாமிகளின் சமாதியின் மீது அமைக்கப்பட்டிருக்கும் சிவலிங்கத்துக்கு அபிஷேகம், பூசை முதலியன செய்துவிட்டு பின்பு சுவாமிகளின் திருவடிகளுக்கும் பாதபூசை நிகழ்த்தினார். அதைத் தொடர்ந்து அநேக அன்பர்கள் இவ்வாறாக அபிஷேகமும், பாதபூசையும் நாள் முழுதும் செய்தவண்ணமிருந்தனர். மட்டக்களப்பு தெய்வநெறிக் கழகத்திலிருந்தும் அங்கு விஜயஞ்செய்திருந்த பிரமச்சாரி ஸ்ரீ ஓங்கார சைதன்யர் இலங்கை மக்களது சார்பில் அபிஷேகமும், பாதபூசையும் செய்து குருதேவரின் சமாதியில் பாதங்களுக்கு மலர்மாலைசூட்டி வழிபாடாற்றினர்.

திரளான சிஷ்யர்களும் பக்தர்களும் உலகின் பல பாகங்களிலிருந்தும் வந்து நிகழ்ச்சிகளில் பங்குபற்றிக்கொண்டனர். பஜனைகோஷ்டிகளெல்லாம் தொடர்ந்து பஜனை நிகழ்த்திக் கொண்டிருந்தனர். சுவாமி சிதானந்தஜீ, சுவாமி கிருஷ்ணனந்தஜீ, சுவாமி மாதவானந்தா, டாக்டர் அத்வாரியோ, பன்னலால் உட்பட அநேகர் சொற்பெருமிவாற்றினர். இசைகோஷ்டியினர் எல்லாம் இன்னிசை விருந்தளித்தனர். பகல் சாதுபோஜனமும், ஏழைகளுக்கு அன்னதானமும் நடைபெற்றன. ஆயிரத்துக்கும் மேலானோர் இதில் கலந்துகொண்டனர் கங்கா தேவிக்கும் விசேஷ பூசை நடைபெற்றது, விஸ்வநாதர் ஆலயத்தில் லட்சார்ச்சனை, விஷேச அபிஷேக ஆராதனை முதலியனவும் நடைபெற்றன.

குருதேவரின் போதனைகள் அடங்கிய புத்தகங்களும், துண்டுப் பிரசுரங்களும் எல்லாருக்கும் வழங்கப்பட்டது.

## பிரிட்டிஷ் அரசாங்கத்தின் மீது கண்டனதீர்மானம் தோல்வி

லண்டன், ஆக 2

பிரிட்டிஷ் அரசாங்கத்தின் மீது காமன்ஸ் சபையில் எதிர்க்கட்சி கொண்டுவந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் 18 வாக்குகள் வித்தியாசத்தால் தோல்வியடைந்தது.

அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கையைக் கண்டித்து எதிர்க்கட்சி இந்தக் கண்டனத் தீர்மானத்தைக் கொண்டுவந்தது.

வாக்கெடுப்பின் போது அரசாங்கத்திற்குச் சாதகமாக 308 வாக்குகளும், எதிராக 290 வாக்குகளும் பதிவாயின.

10 லிபரல்கட்சி அங்கத்தவர்களும் வாக்கெடுப்பில் கலந்துகொள்ளவில்லை.

அரசாங்கக் கட்சியைச் சேர்ந்த ஒருவரும் வாக்கெடுப்பில் கலந்துகொள்ளவில்லை. என்றும் சில கன்சவேர்ட்டிவ் அங்கத்தவர்கள் சபையில் ஆஜராகவில்லை என்றும் அறிவிக்கப்பட்டது.

விவாதத்தின் போது பிரதம மந்திரி திரு வில்சனுக்கும், எதிர்க்கட்சித் தலைவர் திரு. ஹீத்துக்குமிடையே காரசாரமான மோதல் ஏற்பட்டது.

## 20 வருட போருக்கு தயாராய் இருங்கள்

### வடவியட்னும் மக்களுக்கு ஹானேய் ரேடியோ எச்சரிக்கை

ஹானேய், ஆக 3

**வியட்னமில் அடுத்த 20 ஆண்டுகால யுத்தத்துக்குத் தயாராய் இருக்குமாறு ஹானேய் ரேடியோ வடவியட்னும் மக்களை எச்சரித்திருக்கிறது.**

**அதேசமயம் தென்வியட்னுமுக்கு துருப்புகளையும், ஆயுதங்களையும் அனுப்புவதை விரைவுபடுத்துமுகமாக 10 நிபுணர்கள் அடங்கிய குழு ஒன்றை ஜனாதிபதி ஜோன்சன் நியமித்திருக்கிறார்.**

3 டிவிஷன் துருப்புக்களும் 6 யூனிட்டுகள் கொண்ட உதவிப்படைகளும் சாதனங்களும் அடுத்த சில வாரங்களில் தென்வியட்னுமுக்கு அனுப்பப்படவிருக்கின்றன உடனடியாகச் சேவைக்குத் தயாராய் இருக்குமாறும் ஜனாதிபதி இத்துருப்புகளுக்கு உத்தரவிட்டிருக்கிறார்.

அமெரிக்கா வியட்னுமுக்கு மேலும் துருப்புகளை அனுப்பவிருப்பது குறித்து சர்வதேச கட்டுப்பாட்டுக் கமிஷனுக்கு ஹானேய் ஆட்சேபனை தெரிவித்திருக்கிறது.

வெளிநாட்டு மந்திரி திரு. ரஸ்க் நேற்று விடுத்த அறிக்கையில் வியட்னுமில் அமைதியை ஏற்படுத்த ஐ. நா. அங்கத்துவ நாடுகள் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் எனக் கோரியிருக்கிறார்.

வடவியட்னும் மீது குண்டு வீச்சு நிறுத்தப்பட வேண்டும் என்ற டிட்டோ-சாஸ்திரி யோசனை பற்றி அவர் குறிப்பிடுகையில், வடவியட்னும் அதற்குமுன் தனது ஆக்கிரமிப்பை நிறுத்த வேண்டும் எனக் கூறினார்.

இதற்கிடையில் அமெரிக்க, தென்வியட்னும் விமானங்கள் கொரில்லாக்களின் இலக்கு ஒன்றைத் தாக்கி 100 பேரைக் கொன்றதாக அறிவிக்கப்படுகிறது.

## உகண்டா பிரதமர் சாஸ்திரி வியட்னும் பற்றி பேச்சு

புதுடில்லி, ஆக 3

இந்தியப் பிரதமர் திரு. சாஸ்திரியும் உகண்டா பிரதமர் டாக்டர் மில்டன் ஒபேடேயும் வியட்னும் உட்பட சர்வதேச நிலைமைபற்றிப் பேச்சுகள் நடத்தினர்.

நேற்றிரவு டாக்டர் ஒபேடேக்கு அளிக்கப்பட்ட விருந்தில் திரு சாஸ்திரி பேசுகையில் ஆபிரிக்காவில் இன்றும் பல காலனிகள் விடுதலை அடையாமலிருப்பது துரதிருஷ்டவசமானது என்று கூறினார். அங்கோலா, மொஸாம்பிக், தென்ரொடீஷியா, தென்னாபிரிக்கா ஆகிய நாடுகளில் மேற்கொள்ளப்படும் அடக்குமுறை பற்றியும் அவர் வருத்தம் தெரிவித்தார்.

டாக்டர் ஒபடே பதிலளித்துப் பேசுகையில் விடுதலை அடையுமுன் இந்தியா அடிமை மக்களின் வீரனாய்த் திகழ்ந்ததென்றும், அது சுதந்திரம் அடைந்தபின் சங்கிலித்தொடர்போல்பல நாடுகளின் விடுதலைக்கு வழி ஏற்பட்டது என்றும் குறிப்பிட்டார்.

டாக்டர் ஒபடேக்கு இன்று டில்லி செங்கோட்டையில் நகரசபை வரவேற்பு ஒன்று நடத்தியது. டில்லி பல்கலைக்கழகம் அவருக்கு "டாக்டர் ஆப் லா" என்ற கௌரவப் பட்டம் அளித்தது.

## உடனடி யுத்த அபாயம் இல்லை

பெர்லின், ஆக. 3

"மேற்கு ஜெர்மனியில் அடுத்துவரும் பொதுத் தேர்தல் விசேடத்தன்மை உள்ள தேர்தலாகும். மக்களின் சட்டபூர்வமான உரிமையின் கதியை இத்தேர்தல் நிர்ணயிக்கும்" என்று ஜெர்மன் ஜனநாயகக் குடியரசின் ஜனாதிபதி வோல்டர் உல்பிரிச் ஐக்கிய சோஷலிஸக் கட்சியின் மத்திய குழுவின் கூட்டத்தில் பேசுகையில் கூறினார் அவர் மேலும் கூறியதாவது:

உடனடி யுத்த அபாயம் தோன்றியிருக்கிறதென்று நான் கருதவில்லை. ஆனால் மேற்கு பெர்லின் நிலைமை இன்னும் கொந்தளிப்பாகவே இருக்கிறது. மேற்கு பெர்லினின் பிரச்சினை தீர்க்கப்படுவதை அமெரிக்கா தடைசெய்து வந்துள்ளது, காரணம், ஜெர்மனியை ஜெர்மன் மக்கள் ஆளக்கூடாது என்பதுதான். அமெரிக்காவும் மேற்கு வல்லரசுகளுமே ஜெர்மனியை இரு கூறுகளாகப் பிரித்தவை. அன்றுமுதல் இரு ஜெர்மன் ராஜ்யங்கள் இருந்து வருகின்றன. ஜெர்மனி ஐக்கியப்படவேண்டுமானால், இவ்விரு ராஜ்யங்களும் கூடிப் பேசத்தான் வேண்டும்.

## தாராசிங் மீண்டும் சீக்கிஸ்தான் பல்லவி

புதுடில்லி, ஆக. 3

சீக்கியர்கள் தங்கள் வருங்கால அரசியல் தலைவிதியை தீர்மானித்துக் கொள்ள வேண்டும் என அகாலி தலைவர் மாஸ்டர் தாராசிங் கூறினார்.

இந்தியாவில் சீக்கியர்கள் முஸ்லீம்கள், கிறிஸ்தவர்கள் ஆகிய சிறுபான்மை மக்கள் நசுக்கப்படுகிறார்கள் என்றும், ஹிந்துக்கள் சிறுபான்மை மக்கள்மீது ஆதிக்கம் செலுத்துகிறார்கள் என்றும் அவர் குற்றஞ் சாட்டினார்.

சீக்கியர்கள் தங்கள் பிரச்சினையைத் தீர்த்துக் கொள்ள தனிநாடு அமைத்துக்கொள்ள வேண்டும் என்றும் தாராசிங் தெரிவித்தார்.

சீக்கியர்களின் எதிர்காலத் திட்டத்தை அறிவிக்குமுன், பாகிஸ்தானுக்குச் சென்றுவர அனுமதியளிக்கும்படி தாம் இந்திய அரசாங்கத்தைக் கேட்டிருப்பதாயும் மாஸ்டர் தாராசிங் கூறினார்.

## இவர்களுக்கும் கல்வி

பம்பாய், செவ்.

வயது முதிர்ந்தவர்களுக்கு கல்வி கற்பிப்பதற்கான திட்டமொன்றை கல்வி அமைச்சு தயாரித்துள்ளதாகத் தெரிய வருகிறது.

இக் கல்வியை கிராம முன்னேற்றச் சங்கங்கள் மூலமாகவும் சனசமூக நிலையங்கள் மூலமாகவும் செயற்படுத்த வேண்டுமென கல்வி அமைச்சின் அதிகாரிகள் சிபார்சு செய்துள்ளார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கிய நூல்களை இளைஞர் கற்கவேண்டும்"

## முத்தமிழ் மன்றநகலைவிழாவில் பேச்சு

கோண்டாவில், செவ்

"தமிழ்மொழியும், கலாச்சாரமும் நன்கு வளர்ச்சியுறவேண்டுமானல் கிராமங்கள்தோறும் மன்றங்களைநிறுவி அதன்மூலம் செயலாற்றவேண்டும். இன்றைய இளைஞர்கள்தான் எதிர்கால உலகைச் செப்பனிடும்சிற்பிகள். இன்றைய இளம் வாலிபர்கள் மன்றங்களுக்கு ஒத்துழைப்பு நல்குவதுடன், எதிர்கால வளர்ச்சிக்கும் உழைக்கவேண்டும். தமிழ் மொழியில் திருக்குறள், சிலப்பதிகாரம், இராமாயணம், பாரதம் போன்ற சிறந்த இலக்கிய நூல்கள் உள. இவைகளையெல்லாம் இளைஞர்கள் நன்ருகப் படித்து இவற்றின் தத்துவங்களை உணர்ந்துவாழக் கற்றுக்கொள்ளவேண்டும். எல்லாச் செல்வங்களிலும் சிறந்த செல்வமாக் கருதப்படுவது அறிவுச் செல்வமாகும், எனவே அச்செல்வத்தைப் பாமரர்களிடம் புகுத்துங்கடமை மன்றங்களைச் சார்ந்ததாகும்" இவ்வாறு குப்பிழான் கற்பகப்பிள்ளையார் கோவிலுக்கு அருகாமையில் உள்ள திறந்த வெளியரங்கில் நடைபெற்ற முத்தமிழ் மன்றக் கலைவிழாவில் தலைமைதாங்கிய திரு அ சரவணமுத்து பின்வருமாறு பேசினர்.

திரு சி ஆறுமுகம் பேசுகையில், முத்தமிழ்க்கலை மன்றம் நாடகக்கலையை மட்டும் வளர்த்தால்போதாது, சைவசமயப் பெரியோர்களின் சிறப்புக்களை மக்களுக்கு போதிக்கவேண்டும். இந்துக்களிற்சிலர் ஆலயங்களில் பலியிடும் வழக்கத்தைக் கொண்டிருக்கிறார்கள், இது வெட்கக்கேடான செயலாகும். உலகத்திலுள்ள உயிர்களெல்லாம் ஆண்டவனின் பிள்ளைகளென்று இந்துநூல்கள் எடுத்தியம்புகின்றன. இவ்விடயம் இந்துசமய மக்களிடையே அற்றுப்போகும் வரை எமது சமயமும்; சமூகமும் முன்னேற்றமடையமாட்டாது. எனவேஇக் கொடிய செயலைஅறவே ஒழிக்க மன்றங்களும் மக்களும் ஒத்துழைக்கவேண்டும்" என்று குறிப்பிட்டார்.

விழாவின்போது புராணநாடகங்களும், கிராமிய நாடகங்களும் இடம்பெற்றன;

## கடத்தல் வழக்கில் இவ்வாரம் தீர்ப்பு

யாழ்ப்பாணம், புதன்

மேரி றீட்டா என்ற இளம்பெண்ணை கடத்திச் சென்றதாக நல்லூரைச் சேர்ந்த பத்மநாதன் என்பவர் மீது யாழ்ப்பாணம் மஜிஸ்டிரேட் கோர்ட்டில் தொடரப்பட்ட வழக்கில் எதிரி தாம் குற்றவாளி என்று ஒப்புக்கொண்டுள்ளார்.

சுமார் இரண்டு மாதங்களுக்கு முன்னர் இப்பெண்ணை சங்கானைக்கு கடத்திச் சென்றதாக யாழ்ப்பாணம் பெலிசாரினால் பத்மநாதன் மீது வழக்குத் தொடரப்பட்டிருந்தது. இந்த வழக்கு கடந்த வியாழக்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

விசாரணைகளை யாழ்ப்பாணம் பொலிஸ் பகுதி குற்றப்பதிவு பொறுப்பதிகாரி திரு எம் சவுந்தரநாயகம் நடத்துகிறார்.

இவ்வழக்கு மீதான தீர்ப்பு இவ்வாரத்தில் வழங்கப்படும்.

---

## இ. போ. ச. ஊழியருக்கு சலுகை

யாழ்ப்பாணம், புதன்

இ போ ச பஸ்களில் பிரயாணம் செய்யும் ஊழியர்கள் பஸ்கள் தங்கும் இடத்தை மீறி தங்கள் ஊழியர்களை பல டிப்போக்களுக்கு முன்பாக இறக்குவதற்காக அவ்விடங்களில் பஸ் வண்டிகளை நிறுத்தி வருவதாகத் தெரிகிறது. இது குறித்து பிரயாணிகள் யாழ் பிரதேச முகாமையாளருக்கும் இ போ ச அதிகாரிகளுக்கும் புகார் செய்துள்ளார்கள். அனுமதிக்கப்படாத இடங்களில் பஸ்களை நிறுத்தக்கூடாதென்று இ போ ச மனேஜர் ஊழியர்களுக்கு சில மாதங்களுக்கு முன் ஒரு சுற்றுநிருபம் அனுப்பியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது

வேலைவாய்ப்பு

## மாலைதீவில்!

உடுப்பிட்டி, செவ்

இலங்கையிலுள்ள படித்த வாலிபர்களுக்கு வேலைதேடிக் கொடுக்கும் முயற்சியில் சுதந்திரமாலைதீவு அரசாங்கத்துடன் அகில இலங்கை வேலை வேண்டுவோர் கழகம் நடாத்திய கடிதத்தொடர்பைத் தொடர்ந்து விண்ணப்பங்கள் அனுப்பும்படியும் தாம் பரிசீலனை செய்வதாகவும் மாலைதீவு அரசாங்கம் அறிவித்துள்ளதென அகில இலங்கை வேலைவேண்டுவோர் கழகத் தலைவர் திரு கே. ரி இராசசிங்கம் தெரிவித்தார்.

இதுவிடயமாகத் தற்போது இலங்கையில்கல்விகாரணமாக சிகிச்சைபெற்றுவரும் சுதந்திரமாலைதீவின் பிரதமரையும் ஸ்தானிகர்களையும் தமது கழகத்தைச்சேர்ந்த குழுவென்று பேட்டிகாணவிருக்கிறதென்றும், வேலையற்றோர் தமது விபரங்களைக் கழகத்திற்கு அனுப்பிவைக்கும்படியும் அவர் கூறியுள்ளார்.

---

## அரசாங்கத்துக்கு ஆதரவளிக்குக

### கே. எம். பி. வேண்டுகோள்

பண்டாரவளை, செவ்

கடந்த அரசாங்கத்தினல் உருவாக்கப்பட்ட பிரச்னைகளை தீர்த்துவைப்பதற்கு தேசியஅரசாங்கத்திற்கு ஆதரவளிக்கும்படி மூன்ருவ் வெலிமடை எம் பி. திரு கே. எம், பி ராஜரத்ன அம்கஸ்தோவாவில் நடைபெற்ற கூட்டத்தில் வேண்டுகோள் விடுத்தார்.

திரு ராஜரத்ன தொடர்ந்து கூறியதாவது:

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி தினமும் உருக்குலைந்துவருகிறது. கூடியவிரைவில் அக்கட்சியின் பெயரே இல்லாமல் ஒழிந்துபோகும். சதிகாரர்கள் எந்தவிதமான தடையை ஏற்படுத்தினலும், தேசியஅரசாங்கத்தை, இந்த உலகில் உள்ள எந்த சக்தியாலும் வீழ்ச்சியடையசெய்யமுடியாது

உள்நாட்டு உதவிமந்திரி திருமதி குசுமா ராஜரத்தின பேசும்போது கூறியதாவது:

வீழ்ச்சியடைந்துள்ள கட்சிகள் மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றும்பொருட்டு, பொய் வதந்திகளை பரப்பிவருகின்ருர்கள், இதன் மூலம் அரசாங்கத்தை வீழ்த்திவிடலாம் எனக் கருதுகிருர்கள், ஆனல் இந்த நாட்டைக காப்பாற்றவேதேசிய அரசாங்கத்தை மக்கள் தெரிவுசெய்தார்கள் என்பதை அவர்கள் மறந்துவிட்டார்கள்.

---

## சகாய வேலை மறுப்பு

குமுழமுனை, செவ்வாய்

குமுளமுனையிலுள்ள சலவைத்தொழிலாளர்களுக்கு சகாய வேலை மறுக்கப்படடுள்ளது. இவர்கள் தாங்கள் வறுவளியாலும் கடும் வரட்சியாலும் பாதிக்கப்பட்டு மிகவும் கஷ்டமுறுவதாகவும் தங்களுக்கு சகாய வேலை தந்துதவும்படியும் கேட்டு வவுனியா எம். பி. க்கும் வவுனியா அரசாங்க அதிபருக்கும் ஒரு விண்ணப்பம் அனுப்பியுள்ளனர்.

# கரணவாய்ப் பகுதியில் திருடர் தொல்லை

உடுப்பிட்டி, செவ்வாய்

கரணவாயில் கடந்த சில வாரங்களாகத் திருடர் நடமாட்டம் அதிகரித்து வருகின்றது. கடந்த வெள்ளிக்கிழமை இரவு ஒரு கூட்டத்தினர் கத்தி முனையில் திருட்டை நடத்தியதாகக் கூறப்படுகிறது. கரணவாய் தெற்கில் பலிவளவு என்னுமிடத்தில் திருடர்கள் நுழைந்து அவ்வீட்டில் நித்திரை செய்துகொண்டிருந்த ஒருபெண்ணின் கழுத்திலிருந்த சங்கிலியை அறுக்கும்போது அப்பெண் விழித்துக் கூச்சலிட்டதும் சங்கிலியையும் காண்டு ஓடிவிட்டார்களாம். இத்திருட்டு நடைபெற்ற வெள்ளிக்கிழமை இரவு மாத்திரம் சுமார் பத்துத் திருட்டுக்கள் இப்பகுதியில் நடைபெற்றதாகத் தெரிகிறது.

சில இடங்களில் ஆடுகளும் வாழைத்தோட்டங்களிலிருந்து வாழைக்குலைகளும் பெருமளவில் திருட்டுப் போய்விட்டன. கடந்த வாரம் கரணவாய் புட்டிமூலை என்னுமிடத்தில் மாத்திரம் பதினறு வீடுகளிலுள்ள பொருட்கள் களவாடப்பட்டன. கரணவாய் வேதாரணிக் குருக்கள் வீட்டில் ஒன்பது தங்கப்பவுண் நகைகளும், 110 ரூபாவும் முபென்னையா என்பவர் வீட்டில் ஆறு தங்கப்பவுன் பெறுமதியான சங்கிலியும் வே. கந்தையா என்பவர் வீட்டில் மூன்று தங்கப்பவுன் பெறுமதியான சங்கிலியும், பணமும் கொள்ளையடிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. உடுப்பிட்டி வீதியிலுள்ள ஓர் வீட்டில் திருடர்கள் புகுந்து எதுவும் அகப்படாததால் குசினிக்குள் சென்று சாப்பிட்டுவிட்டுச் சுவரில் "உங்கள் வீட்டில் ஒன்றும் இல்லை. சாப்பிட்டுவிட்டுப் போகிறோம்" என்று கரியால் எழுதியிருந்தார்கள்.

கரவெட்டி மத்தொனி என்னுமிடத்திலும் திருட்டுக்கள் நடைபெற்றுள்ளன. இப்பகுதியில் நித்திரை செய்துகொண்டிருந்தவரின் காலைச் சுரண்டிவிட்டு அவர் தலையை நிமிர்த்தியதும் தலையணைக்கடியிலிருந்த சாவிக்கொத்தை எடுத்துக்கொண்டு பூட்டைத் திறந்து களவாடினர்கள் என்று கூறப்பட்டது. சில இடங்களில் நாய்களைக் குரைக்க வைத்து வீட்டுக்காரர் முன்பக்கமாக என்னவென்று பார்க்க வரும்போது பின்பக்கத்தில் ஏற்கனவே தயாராக இருப்பவர்கள் வீட்டினுள் புகுந்து திருடியுள்ளதாகத் தெரிகிறது.

இதனல் கரணவாய் தெற்கு கிராம சவகர் திரு க வேலயுதம்பிள்ளை தலைமையில் தொண்டர் படையொன்று இரவில் ரோந்து சுற்றுவதுடன் சந்தேகமான கார்களையும் மறித்துச் சோதனையிடுகிருர்கள், கரவெட்டி வடக்கு, கரணவாய் வடக்கு கிராம சேவகர்களும் தொண்டர்படையுடன் ரோந்து சுற்றுகின்றனர். குஞ்சர் கடைச் சந்தி, மூத்தநயினர் கோவில் சந்தி, நவலர் மடம், நெல்லியடி, சாமியன் அரசடி ஆகிய இடங்களிலும் குச்சொழுங்கைகளிலும் இரவில் தொண்டர்கள் பலத்த காவல்புரிகின்றனர். பருத்தித்துறை பொலிசாரும் தீவிர புலன் விசாரணை செய்வதுடன் கிராமப் புறங்களிலும் இப்போது ரோந்து சுற்றி வருகின்றனர். கிராமப் புறங்களுக்கும் பொலிஸ் பந்தோபஸ்து இல்லையென்றும் நிரந்தரமான பாதுகாப்புத் தேவையென்றும் இப்பகுதி மக்கள் கோரியுள்ளனர்.

---

## ருஷ்யத் தளபதியின் எச்சரிக்கை

மாஸ்கோ, ஆகஸ்

"எந்த ஆக்கிரமிப்பாளர்களாவது ஜெர்மன் ஜனநாயகக் குடியரசைத் தாக்க முன்வந்தால், அவர்கள் நிச்சயம் நசுக்கப்படுவார்கள்" என்று வார்சா ஒப்பந்தநாடுகளின் கூட்டு இராணுவத்தின் பிரதமத் தளபதியும், சோவியத்படைத்தலைவருமான மார்ஷல் கிரேச்கோ எச்சரித்தார்

"தாய்நாட்டைப் பாதுகாப்பதற்காக தயாராயிருக்கும் ஜெர்மன் ஜனநாயகக் குடியரசின் தேசிய மக்கள் இராணுவத்துடன் சோவியத் இராணுவத்தினர் கைகோர்த்துக் கொண்டு நிற்கின்றனர். ஜெர்மன் ஜனநாயகக் குடியரசின் மேற்கு எல்லைகளை சோவியத் யூனியன் தொடர்ந்து பாதுகாத்து வருகிறது" என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

---

சுழிபுரம், செவ்.

சண்டிருப்பாய் கலைவாணி விளையாட்டுக் கழகத்தினரின் வருடாந்த விளையாட்டுப் போட்டியில் சோழ இல்லம் 184 புள்ளிகளைப் பெற்று முதலாவது இடத்தைப் பெற்றது. பாண்டியன் இல்லம் 113 புள்ளிகளைப்பெற்று இரண்டாவது இடத்தையும், சேர இல்லம் 89 புள்ளிகளைப் பெற்று மூன்ருவது இடத்தையும் அடைந்தன.


ரெமி பொரட்டேட் டல்கம் பவுடர்




ரெமி பவுடரைப் பாவித்திருக்கிறீர்களா? சிறந்த பவுடருக்கு இணையான இந்த உயர்ந்த பவுடர் - வெகு நியாயமான விலைகளில் கிடைக்கும்: அதி உன்னத மூலப் பொருட்களினல் ஆக்கப்பட்ட ரெமி மிக லளிதமாக வாசனையூட்டப்பட்டுள்ளது: உங்கள் வியாபாரிகளிடத்தில் 2 சைஸ் டின்களில் கிடைக்கும்.

ஆவ்ரா அன் கம்பனி,
19, செட்டியார் தெரு, கொழும்பு.
போன்: 7211, 7212

● மருந்துச் சாமான்கள்
● முக்கிய பேற்றன் மருந்துகள்
● கெமிக்கல்
● அறுவைவைத்திய சாதனங்கள்
● ஆடையணிகள்

எல்லாவற்றுக்கும் தலைசிறந்த இடம்

பெற்ரு பார்மஸி
23, டாம் வீதி, கொழும்பு.

மூட்டைப்பூச்சிகளை அழிப்பதற்கு
புதிய ஜெர்மன் மருந்து
பெயரெக்ஸ்
BAYTEX
Agents :
PHONE : 397 ROYAL DISPENSARY JAFFNA


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளம்பரம்

## கேள்வி விளம்பரம்

1 புலோலி கிராமசபைக் கந்தோர் கட்டிடம் கட்டுதல்.
2 சற்கோவனம் மீன்பிடி இலாகா தெருவேலை.

மேற்படி வேலைகளுக்கான கேள்விப்பத்திரங்கள் 12-8-65 வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிவரையும் புலோலி கிராமசபைத் தலைவரால் வழங்கப்படும். கேள்விப் பத்திரங்கள் தலைவருக்கு 14-8-65 காலை 10 மணிக்கு முன் பதிவு செய்யப்பட்டு தபால் மூலம் அல்லது நேரில் சமர்ப்பிக்கலாம்.

கேள்விப்பத்திர நகல் பிரதியொன்று வடபிரதேச (மேல்) உள்ளூராட்சி உதவிஅதிபருக்கு அதே நேரத்தில் கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும்.

ஒவ்வொரு வேலைக்கும் ரூபா 100/- கட்டுப்பணம் கட்டியதன் பேரில் கேள்விப் பத்திரங்கள் வழங்கப்படும். ஒவ்வொரு வேலைக்கும் கேள்விப்பத்திரப் பணமாக ரூபா 15/- கட்ட வேண்டும். இப்பணம் திருப்பிக் கொடுபடமாட்டாது.

மற்றும் விபரங்களை வடபிரதேச (மேல்) உள்ளூராட்சி உதவி அதிபரின் கந்தோரில் அல்லது எங்கள் கந்தோரில் கந்தோர் நேரங்களில் அறிந்து கொள்ளலாம்.

த. சிதம்பரப்பிள்ளை,
பதில்தலைவர்
புலோலிக் கிராமசபை.

புலோலி
கிராமசபைக்கந்தோர்,
பருத்தித்துறை.
2—8—65,　　492

## சீன ஆட்சேபம்

புதுடில்லி, ஆக. 3

இந்தியத்துருப்புக்கள் சீனப் பிராந்தியத்தில் 26 தடவை அத்துமீறியதாக, பீகிங் இந்தியாவுக்கு ஆட்சேபனைக் குறிப்பு அனுப்பியிருக்கிறது.


REGAL - JAFFNA
NOW SHOWING
PATRIC MACGOOHAN
In
All Night Long


# வடபகுதியில் அதிகரிக்கும் திருடர்கள் அட்டகாசம்

உடுப்பிட்டி, செவ்வாய்

கரணவாய், சரவெட்டிப் பகுதிகளில் சில தினங்களாகத் திருட்டு தொடர்ந்து நடைபெற்றுவருகின்றது. பொலிகண்டியிலும் நேற்று ஓரிரவில் பல வீடுகளில் திருட்டு நடைபெற்றுள்ளது. வல்வெட்டித்துறை, பருத்தித்துறை பொலிசார் இத்திருடர் கூட்டத்தைத் தேடுகின்றனர். இக்கூட்டத்தினர் கொலைக்கருவிகளுடன் காரில் வந்துபோவதாகச் சொல்லப்படுகிறது.

ஃ　ஃ　ஃ

குரும்பசிட்டி, செவ்வாய்

குரும்பசிட்டி கிராமத்திலும், அயல் கிராமங்களிலும் கடந்த இருதினங்களாகத் திருடர்களின் நடமாட்டம் அதிகரித்துள்ளது. குரும்பசிட்டி மகாதேவாவித்தியாசாலையில்மாணவர்கள் உடபயோகிக்கும் சில தளபாட உபகரணங்களைக் கடந்த ஞாயிறு இரவு திருடர்கள் களவாடியுள்ளனர். இதனைத் தவிர திருமதி சின்னச்சிப்பிள்ளை என்பவரின் வீட்டுக்குள்ளே புகுந்து சமையல்செய்யும் பாத்திரங்களைத் திருடியுள்ளனர். கிராமங்கவில் விவசாயிகளது தோட்டங்களுக்குள் புகுந்து நீரிறைக்கும் இயந்திர உதிரிப்பாகங்கள் சிலவற்றையும் திருடர்கள் களவாடியுள்ளனர். காங்கேசன்துறைப் பொலிசாரிடம் இத்திருட்டுக்கள் குறித்து மக்கள் புகார்செய்துள்ளதைத் தொடர்ந்து பொலிசார் தீவிர புலன்விசாரணை செய்துவருகின்றனர். திட்டமிட்ட கோஷ்டியினரே இக்கைங்கரியத்தில் ஈடுபட்டுவருவதாக இக்கிராம மக்கள் நம்பிக்கைகொண்டுள்ளனர். குரும்பசிட்டி கிராம முன்னேற்றச் சங்கத்தினர் கிராமத்தில் நடைபெறும் இத்திருட்டுகளைக் குறைப்பதில் ஈடுபடத் தொண்டர் படையொன்றை நிறுவியுள்ளனர்.

ஃ　ஃ　ஃ

முல்லைத்தீவு, செவ்வாய்

முல்லைத்தீவில் திருடர் கோஷ்டியொன்று புதுவகையான முறையில் திருட்டுகள் நடாத்திவருவதாக அறியப்படுகிறது. இக்கோஷ்டி இரவு நேரங்களில் இரு பிரிவுகளாகப் பிரிந்து, ஒரு பிரிவு வீடுகளுக்கு முன்னால் சென்று 'திருடர் திருடர்' என்று கூக்குரலிட்டு வீட்டிலுள்ளவர்களையெல்லாம் 'இல்லாத' திருடர்களைப் பின்தொடரவைத்து விட்டு, தருணத்தை நழுவ விடாது அகப்படும் பொருட்களைச் சூறையாடிக்கொண்டு கம்பி நீட்டிவிடுகிறார்களெனத் தெரியவருகிறது.

இதே தந்திரத்தைக் கையாண்டு முல்லைத்தீவு பலநோக்குக் கூட்டுறவுச் சமாஜத்திலிருந்த மணிக்கூட்டைத் திருடிவிட்டார்களெனப் புகார் செய்யப்பட்டுள்ளது.

## நீர்வேலி கிராம சபையின் ஒப்பந்த அறிவித்தல்

பின்குறிக்கப்படும் வேலை ஒப்பந்தமாக கொடுப்பதற்குக் கேள்விப்பத்திரங்கள் அழைக்கப்படுகின்றன.

நீர்வேலிக் கிராமசபைக் கந்தோரில் ரூபா 25/- கட்டி எடுக்கும் மாதிரிப் பத்திரங்களிலேயே மனுச் செய்யப்பட வேண்டும். அப்பத்திரங்கள் 1965-ம் ஆண்டு ஆவணி மாதம் 9-ந் திகதி திங்கட்கிழமை பன்னிரண்டுமணி வரைக்கும் மேற்படி கந்தோரில் பெற்றுக் கொள்ளவேண்டும்.

கேள்விப்பத்திரங்கள் கடுதாசிக்கூட்டில் அடைக்கப்பட்டு, கூட்டின் இடது பக்கத்தில் மனுப்பத்திரம் என்று எழுதி "கிராமசபைத் தலைவர்" நீர்வேலி என விலாசமிட்டு 1965ம் ஆண்டு ஆவணி மாதம் 14-ந் திகதி சனிக்கிழமை 12 மணிக்கு முன், நீர்வேலிக் கிராமசபைக் கந்தோரில் கிடைக்கும்படி அனுப்புக.

தெரிந்தெடுத்த கேள்விக்காரன் மேற்படிசபைத் தலைவருடன் ஒரு கிழமைக்குள் ஒப்பந்தம் எழுதிக்கொள்ள வேண்டும். மனுப்பத்திரங்களை அங்கீகரிக்கவோ, நிராகரிக்கவோ சபைக்கு அதிகாரம் உண்டு.

கேள்வியின் விபரம்:— நீர்வேலி ஐயாவத்தை - இராசவீதி ஒழுங்கை வேலை.

க. குலசிங்கம்
நீர்வேலிக் கி. ச. தலைவர்
நீர்வேலி
2-7-65.　　493

## இ. போ. ச. டிப்போ தரம் உயரும்

முல்லைத்தீவு, செவ்வாய்

முல்லைத்தீவு இ. போ. ச. டிப்போவின் தரம் இம்மாதம் 15ந் தேதியிலிருந்து உயர்த்தப்படவிருக்கிறது. முல்லைத்தீவிலிருந்து யாழ்ப்பாணம், அநுராதபுரம், வவுனியா மற்றும் உள்ளூர் சேவைகள் யாவும் திறப்பட நடக்கக்கூடியவகையில் சகல வசதிகளுமுள்ள டிப்போவாக ஆக்கப்படவிருக்கிறது.

# வரி விளம்பரம்

### காணி விற்பனைக்கு

நல்லூர் பருத்தித்துறை வீதி சந்தி குமாரவீதி 2-ம் நம்பர், கோவிலுக்கு சமீபமாக 200 யார் தூரத்தில் கிணற்றுடன் சமார் 1 1/4 பரப்ப குடியிருப்பு வளவு விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு நல்லூர் 2ம் கட்டை வீதியில் உள்ள 88-ம் இலக்கத்தில் உள்ள திருவள்ளுவா அச்சகத்தில் நேரில்கலந்துகொள்ளவும். 724

### விற்பனைக்கு

பருத்தித்துறை காரியாதிகாரி கந்தோர், இ போ ச டிப்போ, கந்தசுவாமிகோவில் ஆகியவற்றுக்கருகாமையில் சகல வசதிகளுடன் வீடும், காணியும் விற்பனைக்குண்டு. விபரங்கட்கு கா முத்துக்கிருஷ்ணர் இலட்சுமிபதி, புலோலி கிழக்கு, பருத்தித்துறை. 720

### கல்வி

ஜி. சி. இ. (சாதாரணம்) வகுப்புகளில் சில இடங்கள் காலியாக உள்ளது; தாமதிக்காமல் சேருங்கள். யுனைட்டெட் இன்ஸ்ரிரியூற்ஸ், கெலிலியடி, கரவெட்டி / 107 பருத்தித்துறை ஜேட், நல்லூர், யாழ்ப்பாணம். 725

### தேவை

திறமையுள்ள சேல்ஸ்மன் தேவை நேரில் 6-ம் திகதி விண்ணப்பிக்கவும். டாப்மா இன்டஸ்றீஸ், சென்றல் சேர்விஸ் ஸ்டேசன் (பின்) சுன்னாகம். 726

ஓய்வுபெற்ற அரசாங்க உத்தியோகஸ்தர் ஒருவருக்கு வர்த்தக ஸ்தாபனம் ஒன்றில் கணக்காளர், மனேஜர் அல்லது நிர்வாகஸ்தர் உத்தியோகம் தேவை. விளம்பர இலக்கம் 727, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 727

வீட்டுக்கு வீடு எங்கள் சாமான்களை விளம்பரம் செய்வதற்கு ஆண், பெண் இருபாலாரும் தேவை, நேரில் விண்ணப்பிக்கவும்; தி நாஷனல் சேல்ஸ் கோப்பரேசன், 1/3 மின்சாரநிலைய வீதி, சனிபார கட்டிடம், பெரியகடை, யாழ்ப்பாணம். 729

## வானொலி நிகழ்ச்சிகள்

### கொழும்பு

### புதன் 4-8-65

(செய்திகள் காலை 7-15, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 நாதாஞ்சலி' 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-00 துதிப்பாடல்கள், 7-30 தேர்ந்த இசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்,

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 நிலைய ஒலிப்பதிவுகள், 5-45 படப்பாட்டுக்கள்,

இரவு 6-15 கிராமசஞ்சிகை 6-45 பாட்டு, 7-45 பேச்சு, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி 9-15 வாத்திய இசை, 9-30 நேயர் விருப்பம், 10-00 தேர்ந்தஇசை

## புதுவருட உத்தியோகத்தர்கள்

பருத்தித்துறை, திங்கள்

தென்புலோலி அறிவகம் சனசமூகநிலைய வருடாந்தப் பொதுக்கூட்டம் அண்மையில் நடைபெற்ற போது நடப்பு வருட உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்,

தலைவர் திரு க சுந்தரம், உபதலைவர் திரு ந திரவியம், செயலாளர் திரு கா செல்வராசா, உபசெயலாளர் திரு மா பரஞ்சோதி, தனாதிகாரி திரு வ சிவலிங்கம்.

மேலும் 7 பேர் கொண்ட நிர்வாகசபையும் தெரிவுசெய்யப்பட்டது.

## ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், புதன்

ஏழாலை கிராமசபையின் மாதாந்தக் கூட்டம் கிராமசபைத்தலைவர் திரு சி செல்வநாயகம் தலைமையில் நடைபெற்றபோது, புதிதாகக் கிராமசபை அமைக்கும் இடம் பற்றிக் காரசாரமான விவாதம் இடம்பெற்றது. விவாதத்தில் முக்கிய பங்கெடுத்துக் கொண்ட அங்கத்தவர்களான எம். சின்னத்தம்பிக்கும், எஸ். இரத்தினசிங்கத்துக்கும் இடையே விவாதம் முற்றி உச்சக்கட்டத்தை அடைந்த போது தலைவர் கூட்டத்தை ஒத்திவைத்தார்.

## ஏதன்ஸில் அமளி

ஏதன்ஸ், ஆகஸ்ட் 3

நேற்று கிரேக்க பார்லிமெண்டில் புதிய பிரதமருக்கு நம்பிக்கை தெரிவிப்பது சம்பந்தமான விவாதத்தில் பெரும் அமளிதுமளி ஏற்பட்டது. நேற்று 5 மணிநேரம் விவாதம் நடைபெற்றபின் இன்றுவரை மேல்விவாதம் ஒத்திவைக்கப்பட்டது. முன்னாள் பிரதமர் பபாந்திரியோவுக்கும், புதிய பிரதமர் நோவாஸுக்குமிடையேயான பலப்பரீட்சையின் முடிவு இன்று வாக்கெடுப்பில் தெரியும்.

## சமாதான சபையின் வேண்டுகோள்

பெர்லின், ஆக. 3

ஹெல்சிங்கில் நடைபெற்ற உலக சமாதானக் காங்கிரஸில் கலந்துகொண்ட ஜெர்மன் ஜனநாயகக் குடியரசின் சமாதான சபை உலக மக்களுக்கு விடுத்துள்ள ஒரு வேண்டுகோளில், வியட்நாமில் அமெரிக்க ஆக்கிரமிப்பு நிறுத்தப்பட வேண்டுமென்றும், தெவியட்நாமில் அமெரிக்கத் துருப்புகள் வாபஸ் செய்யப்பட வேண்டுமென்றும் தென்வியட்நாம் மக்களுக்குச் சுதந்திரமும் சுயநிர்ணய உரிமையும் வழங்கப்பட வேண்டுமென்றும் கோரியுள்ளது.


இப்பொழுது திரையிடப்படுகிறது
சிங்லி (கொழும்பு)　பிளாசா (வெள்ளவத்தை)　நவா (கொம்பனித்தெரு)
மோடேர்ன் (பதுளை)　வெலிங்டன் (யாழ்ப்பாணம்)　விஜிதா (ஹட்டன்)
விஜயா (மட்டக்களப்பு)　நிவோலி (நுவரேலியா)　கல்யாணி (காவலப்பிட்டி)
லக்ஷ்மி (இரத்தினபுரி)　அபன் (மன்னார்)
எம். ஜி. ஆர்.
சரோஜாதேவி
மற்றும் பலர் நடித்த
தேவர் பிலிம்ஸ்
நீதிக்குப்பின் பாசம்


# சைவசித்தாந்தத்தின் நிலைக்களமாக விளங்கிய பெரியார் சிவபாதசுந்தரனார்

## நினைவு தின விழாவில் பேச்சு

சுழிபுரம், செவ்வாய்

"காலங்கள் கடந்து சென்றாலும் இந்த நாட்டில் வாழ்ந்த பெரியார்கள், அறிஞர்கள் நினைவு என்றும் மக்கள் மனதைவிட்டு மாறமாட்டாது. எமது நாட்டு மக்கள் பூரண சுதந்திர புருஷர்களாக வாழ முயலும்போது, சேர் பொன் இராமநாதன், சிவபாதசுந்தரனார் போன்ற பெரியார்களின் நினைவு மேலும் மேலும் மக்களால் பாராட்டப்படும்" என்று விக்டோரியாக் கல்லூரியில் நடைபெற்ற சிவபாதசுந்தரனார் நினைவு விழாவில் பேசுகையில் யாழ்ப்பாண இந்துக் கல்லூரி அதிபர் திரு. என். சபாரத்தினம் குறிப்பிட்டார். அவர் மேலும் தமது பேச்சின்போது குறிப்பிட்டதாவது:-

பெரியார் சிவபாதசுந்தரனாரின் நினைவு மக்கள் மத்தியில் தீபமாகச் சுடர்விடுவதற்கு அவர் பெயரில் போட்டிகள் நடத்தி ஞாபகார்த்த பரிசுகள் வழங்கவேண்டும் என்று கூறி [illegible] உதவி ஒரு மாணவனுக்கு விசேடமாக அவன் மேன்மையடைவான் என்பதை சிவபாதசுந்தரனாரின் மாணவர்கள்மூலம் அறிந்து கொள்ளலாம். ஆழ்ந்த அறிவும், உயர்ந்த நோக்கும் கொண்ட பெரியார் சுந்தரனார் நல்ல ஒழுக்கசீலராகவும், உயர்ந்தநோக்குமுடையவராக வாழ்ந்தார். மதி நுட்பமும், திறமையும் உடைய பெரியார் சிவபாதனார், கல்லூரியில் பாடங்களைக் கற்பிக்கும் முறையே மிகவும் புதுமையாகும். திருக்கேதீஸ்வர ஆலய புனருத்தாரண வேலைகளுக்கு அதிகம் முன்னின்று உழைத்தவர். பழமையில் ஊறியவர் என்று கருதப்பட்டாலும் அன்று நடைபெற்ற காங்கிரஸ் மகாநாட்டுக்குத்தலைமைதாங்கி நடாத்திவைத்தார் சைவசித்தாந்தத்தின் நிலைக்களமாக விளங்கும் பெரியாரின் நினைவு எம்மை என்றும் விட்டு அகல மாட்டாது.

பண்டிதர் க. ஆறுமுகம், திரு. எஸ். நவரத்தினம் உட்பட வேறு பலரும் பேசினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'சிவப்பு நாடா'வால் மக்கள் பட்டினி!

முல்லைத்தீவு, செவ்,

"முள்ளியவளைப் பகுதி மக்களுக்கு ஆடி 19-ம் திகதிமுதல் நிவாரணவேலை கொடுக்கும்படி வவுனியா அரசாங்க அதிபர் உத்தரவிட்டிருந்தார். ஆனால் கச்சேரியிலிருந்து 'செக்றோல்' புத்தகம் அனுப்பப்படாத காரணமாகவே நிவாரணவேலைகள் ஆரம்பிக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டது" என்று முல்லைத்தீவுக் காரியாதிகாரி திரு. மா. நடராசா முள்ளியவளை கிராமமுன்னேற்றச்சங்கத்தின் நிர்வாகசபைக் கூட்டத்தில் ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில் குறிப்பிட்டார்.

"செக்றோல் புத்தகம் இல்லாததால் மக்கள் பட்டினி கிடப்பதா?" என்ற கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார். ஆடிமாதம் நிவாரணவேலை செய்தால் எவ்வளவு பணத்தை ஒவ்வொரு குடும்பத்தினரும் உழைத்திருப்பார்களோ அவ்வளவு தொகையை அரசாங்கம் விரைவில் சகாயப்பணமாக வழங்கவேண்டுமென்று தாம் அரசாங்கத்துக்கு சிபார்சு செய்திருப்பதாகவும் திரு. நடராசா கூறினார்.

## கூட்டுறவாளர் தினக்கொண்டாட்டம்

மன்னார், செவ்.

மன்னார்ப்பகுதியிலுள்ள கூட்டுறவு சமாச ஆதரவில் புனித சவேரியார் பிரதம பாடசாலை மண்டபத்தில் "சர்வதேசக் கூட்டுறவாளர்தினக் கொண்டாட்டம் மிகச்சிறப்பாக நடைபெற்றது. மன்னார்ப்பிரிவு-முசலி, மாந்தைப்பிரிவு பாடசாலைகளின் பேச்சு, நடனம், கும்மி, நாடகம் முதலிய போட்டிகளும், காலையில் சைக்கிளோட்டப்போட்டியும் இடம்பெற்றன.

திருமதி உ. தே. ஏபிரகாம் பரிசில்கள் வழங்கினார். மன்னார் சவேரியார்கல்லூரியும் ஆண்டான்குளம் றோமன்கத்தோலிக்க பாடசாலையும், அநேக பரிசில்களைப்பெற்றன.

## வியட்நாமை கைவிடுக
### அமெரிக்காவுக்கு டாய்ன்பீ புத்திமதி

நியூயோர்க், ஆக. 3

வியட்நாமில் தோல்வியை ஏற்கும்படியும், தென்வியட்நாம் கம்யூனிஸ்ட் வலைக்குள் செல்லும்படி விட்டுவிடும்படியும் பிரபல பிரிட்டிஷ் சரித்திராசிரியர் ஆர்னோல்ட்டாய்ன்பீ கூறியுள்ளார்.

வியட்நாமில் தங்குவது மூலம் அமெரிக்கா காலனிக் கொள்கையை அனுஷ்டிக்கிறது என்றும், ரஷ்யாவையும் சீனாவையும் மீண்டும் ஒன்றுபடச் செய்வதாயும் அவர் கூறியிருக்கின்றார்.

## வான் விபத்தில் 6 பேர் மரணம்

கொழும்பு, திங்கள்

கதிர்காமத்துக்குச் சென்றுகொண்டிருந்த வசனொன்று மரமொன்றுடன் மோதியதால் இந்த வானில் சென்ற 6 யாத்திரிகர்கள் ஸ்தலத்திலேயே மரணமானார்கள்.

இப்பரிதாப சம்பவம் காலியில் நடைபெற்றது. பாணந்துறையிலுள்ள பண்டாரகமவைச் சேர்ந்தவர்கள் இந்த யாத்திரிகர்கள் என அறியப்படுகிறது

## இன்று

சண்டிருப்பாய் இந்துக் கல்லூரியில் சுந்தரர் குருபூசை பிற்பகல் 3-30 மணிக்கு நடைபெறும். தேவார இசைப்புலவர் திரு. சி. நடராசா நிகழ்த்துவார். இசை வகுப்பு மாணவிகளின் தேவார இன்னிசையும் இடம்பெறும்.

ஃ ஃ ஃ

### வண்ணார்பண்ணையில்

அகில பிராமண குரு சமூக சேவா சங்கத்தினரால் சுந்தரமூர்த்திநாயனார்குருபூசை மாலை 5 மணிக்கு வண்ணார்பண்ணையிலுள்ள 'காயத்ரீபீடம்' மண்டபத்தில் கொண்டாடப்படும். வேதபாராயணம், பஜனை சங்கீத கதாப்பிரசங்கம் முதலிய நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

ஃ ஃ ஃ

### மானிப்பாயில்

மானிப்பாய் இந்துசமய விருத்திச் சங்கத்தினர் சுந்தரமூர்த்திநாயனார் குருபூஜையை இன்று கொண்டாடுகிறார்கள். மானிப்பாய் இந்துக்கல்லூரி வாகீசர் மண்டபத்தில் மாலை நடைபெறும் இப்பூஜையில் "பரவையார் திருமணம்" என்னும் பொருள்பற்றி புலவர் தி. குமாரசாமிப்பிள்ளை சங்கீத கதாப்பிரசங்கம் செய்வார்.

ஃ ஃ ஃ

### கோப்பாயில்

இருபாலை சைவபரிபாலன சங்கத்தினர் சுந்தரமூர்த்திநாயனார் குருபூஜையை இன்று மாலை கோப்பாய்தெற்கு கற்பகப்பிள்ளையார் கோயில் மண்டபத்தில் திரு. வை. சண்முகநாதன் தலைமையில் நடைபெறுகிறது. திருமதி நாகம்மா தெய்வேந்திரம் "மாதரும் சமயமும்" என்னும் பொருள்பற்றியும், ஆசிரியர் திரு. சி. நடராசா "சுந்தரரும் சமயவாழ்வும்" என்னும் பொருள்பற்றியும் உரை நிகழ்த்துவர்.

ஃ ஃ ஃ

கண்டி மத்திய மாகாண சைவமகாசபையினரால் சுந்தரர் குருபூசை மாலை 6-30 மணிக்கு சபா மண்டபத்தில் கொண்டாடப்படும். கூட்டுப் பிரார்த்தனை, சங்கீத கதாப்பிரசங்கம் முதலியனவும் இடம் பெறும்.

ஃ ஃ ஃ

அனுராதபுரம் விவேகானந்த சபையினரால் மாலை 6-30 மணிக்கு சுந்தரர் குருபூசை விவேகானந்த தமிழ் மகாவித்தியாலய மண்டபத்தில் நடைபெறும். பேச்சுப் போட்டிகளும் சொற்பொழிவுகளும் இடம் பெறும்.

## ஐயாறன்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

என்று உரத்த குரலில் உணர்ச்சியுடன் கூறினார் டட்லி. "பௌத்ததர்மம் இதுதானோ?" என்று யு. என். பி. எம். பி.க்கள் பலர் ஆசனத்திலிருந்து எழுந்து ஆர். ஜி.யைப் பார்த்துச் சொல்லம்புகள் விட்டனர்.

வடக்கு கிழக்கு மாகாணங்களிலே இராணுவத்தைப் பலப்படுத்திருப்பதாகப் பிரதமர் கூறியதும் ஆர். ஜி. கரகோஷம்செய்தார். இப்பகுதிகளிலிருந்து இராணுவத்தை நீக்கவேண்டுமென்ற தமிழ்ப் பிரதிநிதிகளின் கோரிக்கை இங்கிலையில் எப்படி, எப்போது நிறைவேறப்போகின்றது?

* * *

மீளா அடிமை உமக்கே ஆளாய்ப் பிறரை வேண்டாதே, மூளாத் தீபோல் உள்ளே கனன்று முகத்தால் மிக வாடி, ஆளாயிருக்கும் அடியார் தங்கள் அல்லல் சொன்னக்கால், வாளாங்கிருப்பீர் திருவாரூரில் வாழ்ந்து போதீரே.

—சுந்தரமூர்த்திசுவாமிகள்

## மாவிட்டபுரத்தில் அருணகிரிநாதர் விழா

யாழ்ப்பாணம், புதன்

மாவிட்டபுரம் முத்தமிழ்க் கலை மன்றத்தினர் வருடந்தோறும் நடத்திவரும் அருணகிரிநாதர் விழாவும் இசைவிழாவும் இம்மாதம் 15, 16, 17-ம் திகதிகளில் மாவிட்டபுரத்தில் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

முத்தமிழ்க்கலை மன்றத்தின் பத்தாவது ஆண்டு விழாவை யொட்டி இம்மன்றத்தினர் தமது விழா நிகழ்ச்சிகளை விரிவாகவும், சிறப்பாகவும் நடத்தவிருக்கின்றனர்.

## வங்கியில் மொழிச் சிக்கல்

பம்பலப்பிட்டி, செவ்,

சர்வதேச வங்கித் தொடர்புகள் ஆங்கிலத்தில் நடந்துகொண்டிருந்த போதிலும், காசோலை, செலாவணி சம்பந்தப்பட்ட கணக்குகள் யாவும் உத்தியோக மொழிச் சட்டத்தின் பிரகாரம் திருத்தி அமைத்தால்தான் வங்கியின் நிர்வாகத்தை சிறந்த முறையில் பாதுகாக்க முடியும் என இலங்கை வங்கி நிர்வாகிகள் தங்கள் வருடாந்த அறிக்கையில் நிதி மந்திரிக்கு அபிப்பிராயம் தெரிவித்துள்ளார்கள்.

வங்கி தேசிய மயமாக்கப்படுவதற்கு முன்னரே உத்தியோக மொழிச் சட்டம் நடைமுறைக்கு வந்ததென்றும் நிர்வாகிகள் தங்கள் அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளார்கள்.

(5ம் கலத் தொடர்ச்சி)

திரு ஜே யோசேப் நன்றி கூறினார்.

### தேநீர் விருந்து

ஸ்தலஸ்தாபன மந்திரி திரு. திருச்செல்வத்திற்கு புளியங்கூடல் சனசமூகநிலையத்தினர் ஒரு தேநீர் விருந்துபசாரம் நடத்தினர்.

நேற்று நண்பகல் நடந்த இந்த உபசாரத்தில் தீவுப்பகுதி எம். பி. திரு நவரத்தினமும், திருமதி நவரத்தினமும் மற்றும் பிரமுகர்களும் கலந்து கொண்டனர். புளியங்கூடல் சௌவுமிய மாதர்களும் இந்த வைபவத்தில் பங்குபற்றிக் கொண்டனர். பண்டிதர் திரு. நா. கந்தப்பு மந்திரியை வரவேற்றுப் பேசுகையில், பொருளாதாரவளர்ச்சிக்கு மின்சாரம் தேவை எனக் குறிப்பிட்டார்.

விருந்துபசாரத்திற்கு நன்றி தெரிவித்துப் பேசிய மந்திரி அவசியமான தேவைகளை தான் நன்கு அறிந்து ஆவன செய்வதாக உறுதியளித்தார். நிலையக் காரியதரிசியால் நன்றியுரை கூறப்பட்டது.

## தடுப்புக்காவல்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அமர்த்துவதெனவும் தீர்மானிக்கப்பட்டது. மேற்படி இராணுவ முகாமை கேர்ணல் உடுகம நன்கு சுற்றிப் பார்வையிட்டு இராணுவ வீரர்களின் வசதிகள் தேவைகள் பற்றியும் கேட்டு அறிந்து கொண்டார்.

## மரண அறிவித்தல்
### திருமதி தமயந்தி ராஜமார்த்தாண்டன்

டி. கே. ராஜமார்த்தாண்டன் (ஆசிரியர் யாழ் சென். ஜோன்ஸ் கல்லூரி) அவர்களின் அருமை மனைவியும் திரு., திருமதி சி. என். தேவராஜன் ஆகியோரின் அருமைப் புதல்வியும், திருமதி என். நவரத்தினம், திரு. பி. ஆர். தேவராஜன், திரு. டி. பி. அகஸ்டின் ஆகியோரின் அருமைச் சகோதரியுமான திருமதி தமயந்தி அவர்கள் காலமாகிவிட்டார்; அன்னாரது பூதவுடல் இறுதிச் சடங்குக்காக புதன்கிழமை (4-8-65) காலை 7-30 மணிக்கு மானிப்பாய் பீபிலி பயானத்துக்கு ஆனைக்கோட்டை 'சிவாஞ்சலி' இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்படும்.

# காங்கேசன்துறை கோடிக்கரை பாதையை திறக்கவேண்டும்
## மாவிட்டபுரம் தெப்ப திருவிழாவில் பேச்சு

காங்கேசன்துறை, செவ்

மாவிட்டபுரம் ஸ்ரீகந்தசுவாமி கோவிலில் முதன் முறையாக நடைபெற்ற தெப்பத் திருவிழாவைப் பல்லாயிரக்கணக்கான மக்கள் கண்டுகளித்தனர்.

மாவிட்டபுர முருகன் எட்டாம் நூற்றாண்டில் தென்னிந்தியாவிலிருந்து கசாத்துறை வழியாக மாவிட்டபுரம் வந்து சேர்ந்த சரித்திரத்தை உணர்த்தும் முகமாக இத்தெப்பத் திருவிழா ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

கடந்த வெள்ளிக்கிழமை மாலை முருகப் பெருமான் காங்கேசன்துறை கசாத்துறை ஆனந்தப்பிள்ளையார் கோவிலை வந்தடைந்ததும், அங்கு புதிதாக கொழும்பு நியூ லீலா அச்சக உரிமையாளர் திரு. ச. த. சின்னத்துரை தமது தாயார் நினைவாக உருவாக்கிய வசந்த மண்டபத்தில் முருகப்பெருமானுக்கும் விநாயகப்பெருமானுக்கும் விசேஷ ஆராதனைகள் நடாத்தப்பட்டன.

பின்னர் விநாயகரும், முருகனும் காங்கேசன்துறைக் கடலுக்கு எழுந்தருளி, கடலில் அலங்கரிக்கப்பட்ட கங்காதேவி அம்மன் வள்ளத்திலும் கௌரி வள்ளத்திலும் சிறுதூரம் பவனிவந்தனர். பக்திபரவசமான இக்காட்சியை ஆயிரக்கணக்கானோர் கண்டு மகிழ்ந்தனர்.

பக்தர்கள் மத்தியில் திரு. வே. பி. ஹரன் உரைநிகழ்த்துகையில் குறிப்பிட்டதாவது:-

காங்கேசன்துறைக்கும் தென்னிந்தியாவுக்குமிடையேயுள்ள தூரம் மிகவும் சிறியது. ஆனால் நாம் நீண்டதூர கஷ்டமான பிரயாணம் செய்ய வேண்டிய நிலையில் இன்று இருக்கின்றோம். காங்கேசன்துறைக்கும் கோடிக்கரைக்கும் இடையே புதிய பாதை ஒன்றினை அரசாங்கம் விரைவில் திறக்கவேண்டும். 18 நூற்றாண்டுகளுக்குப் பின்னர் முருகப் பெருமானும் கசாத்துறை பிள்ளையாரும் ஒரே சமயத்தில் காங்கேசன்துறைக்கு எழுந்தருளியிருப்பது நமக்கு புதிய உணர்வையும் மகிழ்ச்சியையும் தரக் கூடியது. துறைமுகம் அபிவிருத்தி செய்யப்பட்டிருக்கும் நல்லதும் நிலையில் தெய்வங்களும் நமக்கு உறுதுணையாக இருக்கின்றன.

எனவே நாம் நமது முயற்சிகளில் நம்பிக்கை கொள்ள வேண்டும், பக்திபரவசமான கண்கொள்ளாக் காட்சியை இன்று நாம் காண்பதற்கு உதவியவர்கள் அனைவரதும் நன்றிக்குரியவர்கள். ஆலயங்களில் புது மண்டபங்களை அமைத்து ஆலய வழிபாட்டுக்கு உதவுவது பெருந்தொண்டு. இத்தகைய பணிகளில் இப்பகுதி மக்கள் ஈடுபடவேண்டும்.

விசேஷ மேளவாத்தியக் கச்சேரிகளுடன் பிள்ளையாரும், முருகனும் பூந்தொட்டிகளில் தத்தம் ஆலயங்களைச் சேர்ந்தனர்.

# பிரதேச சபைகளிடம் பாடசாலைகள் ஒப்படைக்கப்படும்
## அமைச்சர் திருச்செல்வம் பேச்சு

ஊர்காவற்துறை, செவ்,

"தேசிய அரசாங்கத்தில் நிபந்தனையின் பேரில்தான் சேர்ந்தோம். ஒப்பந்தம் இருக்கிறது அவை நிறைவேற்றப்படுமென்ற நம்பிக்கை உண்டு. ஆனால் நமது உரிமைகள் இன்னும் கிடைக்கவில்லை. அரசாங்கத்துடன் நாம் இரண்டறக் கலந்துவிடவுமில்லை ஒடும்புளியம் பழமும் மாதிரி இருந்துவருகிறோம்" என்று ஸ்தலஸ்தாபன அமைச்சர் திரு திருச்செல்வம் நேற்று நண்பகல் வேலணை இளைஞர் கழகத்தினரால் மகாகணபதிப்பிள்ளையார் ஆலயத்தில் நடத்தப்பட்ட வரவேற்புக்கூட்டத்தில், அமைச்சரை வரவேற்றும் பேசிய தீவுப்பகுதி எம் பி திரு நவரத்தினம் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அமைச்சர் திரு திருச்செல்வம் நேற்றுக் காலை வேலணைக்கு வந்தபோது கிராமசபைத் தலைவர் திரு பி சுப்பிரமணியமும், அங்கத்தவர்களும் மலர் மாலைகள் அணிவித்து வரவேற்றனர். இதனைத் தொடர்ந்து வேலணை மகாகணபதிப்பிள்ளையார் ஆலயத்திற்கு அமைச்சர் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டார்.

திரு எஸ் எம் கணபதிப்பிள்ளை தலைமையில் நடந்த வரவேற்புக் கூட்டத்தில் அமைச்சர் திருதிருச்செல்வம் பேசியதாவது:-

நான் தேசியஅரசாங்கத்தில் ஒரு மந்திரியாக இருக்கிறேன் இலங்கைமுழுவதும் நான் என் பணியை ஆற்றவேண்டும். ஆனால் நான் ஒரு தமிழ் மந்திரியாகவிருப்பதால் தமிழர்களின் பிரச்னைகளையும் முதலில் கவனிக்க வேண்டியவனாகஇருக்கிறேன். உரிமைகளைப் பெறுவதே எனது முதல் நோக்கம் இந்தநேரத்தில் எதிர்க்கட்சியினர் தமிழ் அரசாங்கம் வந்துவிட்டது எல்லாம் தமிழ் என தவறான பிரசங்கங்களைச் செய்கிறார்கள் மீண்டும் கலவரத்தையுண்டுபண்ணுமல் பிரச்னை தீர எல்லோரும் ஒத்துழைக்கவேண்டும்.

திரு எம். குமாரசாமிப்பிள்ளை ஆசிரியர் திரு ச ஏரம்பு போஸ்ட்மாஸ்டர் திரு சரவணமுத்து ஆகியோரும், அமைச்சரையும், எம் பி யையும் பாராட்டிப்பேசினர். வேலணை இளைஞர் கழகத்தினர் அமைச்சருக்கு வரவேற்புப் பத்திரமொன்று வாசித்தளித்தனர்.

குழாய்நீர் திட்டமொன்றை வேலணைத் தீவுப்பகுதியில் அமுல் நடத்துவது சம்பந்தமாக அமைச்சர் வேலணைமேற்கில் அமைந்துள்ளகேணி ஒன்றைப்பார்வையிட்டார்.

தீவுப்பகுதி எம் பி யின் வேண்டுதலின்பேரில் வேலணை புங்குடுதீவு ஆகிய இடங்களுக்கு விஜயம்செய்தஸ்தலதாபன மந்திரி திருச்செல்வம் நேற்றுப் பிற்பகல் ஊர்காவற்றுறை பட்டினசபை எல்லைக்குள் வந்தபோது மாபெரும் வரவேற்பு அளிக்கப்பட்டது.

தீவுப்பகுதிவட்டாரவித்தியாதரிசி திரு சீமாம்பிள்ளை கேள்வியொன்றுக்கும் பதிலளிக்கையில் பிரதேசசபைகள் அமைக்கப்படும்போது, அவற்றிடம் பாடசாலைகள் ஒப்புவிக்கப்படவசதி செய்யப்படுமெனத் தெரிவித்தார்.

மதியபோசனவிருந்து முடிவடைந்ததும், தீவுப்பகுதி வட்டார பாடசாலைகளின் விளையாட்டுப் போட்டியை அமைச்சர் பார்வையிட்டார். அப்போது பாடசாலைகளின் அணிவகுப்பு நடைபெற்றது. புங்குடுதீவுமகாவித்தியாலய மாணவிகள் தமிழ் வாழ்த்துப் பாடினர்.

மாலை நிகழ்ந்த பரிசளிப்பு விழாவில் மந்திரி உரைநிகழ்த்துகையில், இளைஞர்கள் வீரர்களாகவும் திறமையானவர்களாகவும் வருவதற்கு தேகப்பயிற்சியும் விளையாட்டுக்களும் அவசியமானவை எனக் கூறினார். வித்தியாதரிசி திரு சீமான்பிள்ளை மந்திரியை வரவேற்றுப் பேசினார், தீவுப்பகுதி எம் பி யின் பாரியார் திருமதி நவரத்தினம் பரிசுகளை வழங்கினார், ஆசிரியர்

(3-ம் கலம் பார்க்க)

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1965-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 4-ம் திகதிஅச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org